வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : news@eelanadu.lk மலர் : 03 11.04.2022 திங்கட்கிழமை இதழ் : 126 பக்கங்கள் : 16


# ராஜபக்ஷ குடும்பம் மீது போர்க்குற்ற விசாரணை!

## ஜனாதிபதி செயலகம் முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை




கொழும்பு, ஏப்ரல் 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதும், ராஜபக்ஷ குடும்பம் மீது போர்க்குற்ற விசாரணை நடத்துமாறும், அவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறும் கொழும்பில் இடம்பெற்றுவரும் எதிர்ப்புப் போராட்டங்களின்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 15



# கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஜனாதிபதி செயலகம் முற்றுகை!

## தொடர்கிறது மக்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 11

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி தென்னிலங்கை மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்றும் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தொடர்ந்தது.

கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன் தினம் கொழும்பில் திரண்ட ஆயிரக் கணக்கான மக் 15

# ஆட்சியாளர்களை விரட்டும் முன் அரசமைப்பு மாற்றம் அவசியம்!



## முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 11

“ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்னர், அவர்கள் ஊடாக நாட்டில் அரசமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்.” - என்று முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார். 15

# மைத்திரி - சஜித் அவசர சந்திப்பு!

## விமல் அணியும், இ.தொ.காவும் பங்கேற்பு

கொழும்பு, ஏப். 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள மைத்திரிபால சிறிசேனவின் 15

# மழையுடனான காலநிலை;

# சிறுவன் உட்பட இருவர் மரணம்!

கொழும்பு, ஏப். 11

நாட்டில் நிலவும் அதிக மழையுடனான வானிலை காரணமாக சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, நெலுவ - எம்பலேகெதர வீதியில் பாலம் ஒன்றை கடக்க முற்பட்ட சிறுவனொருவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளான் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் எம்பலேகெதர பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுவனொருவனே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 15

# மன்னாரிலிருந்து மேலும் 19 பேர் தனுஷ்கோடி சென்றடைந்தனர்!

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு வந்த 20 இலங்கை தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு கைக் குழந்தைகளுடன் 5 குடும்பத்தைச் சேர்ந்த மேலும் 19 15

# கோட்டாபய அரசின் கையாலாகாத்தனம்

## சாடுகின்றார் ரணில்

கொழும்பு, ஏப். 11

தற்போதைய அரசாங்கம் நிதி சவால்களை கையாள்வதில் திறமையின்மையால் நாட்டை ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளுவதாக குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கம் முற்றாகத் தோல்வியடைந் 15

# நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்வதற்கு நாங்கள் தயார்!

## நிதி அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



கொழும்பு, ஏப். 11

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்கத் தயார்.”

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நிதி அமைச்சர் அலி சப்ரி.

ஐக்கிய மக்கள் சக்தியால் அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

அமைச்சர்கள் பதவி விலகி, அமைச்சுப் பொறுப்புகளை ஏற்குமாறு அழைப்பு விடுத்தோம். அந்த அழைப்பை எதிரணி ஏற்கவில்லை.

பாராளுமன்றத்தில் 113 ஐ காண்பித்து ஆட்சியைப் பொறுப்பேற்கச் சொன்னோம். அதற்கு எதிரணி தயார் இல்லை. 15





# காலிமுகத்திடலில் மக்களின் போராட்டம் தொடர்கின்றது!

## மரவள்ளியுடன் சுடச்சுட தேனீர்

கொழும்பு, ஏப். 11

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு, பழைய பாராளுமன்ற கட்டடத்துக்கு முன்பாகவும் காலி முகத்திடலிலும் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

காலிமுகத்திடலை மேவியிருந்த போராட்டக்காரர்களில் பெரும்பாலானவர்கள், நேற்று முன் தினம் நள்ளிரவுடன் சென்றுவிட்டனர். எனினும், ஒருசிறு குழுவினர், ஜனாதி 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

மஹிந்த ராஜபக்ஷ பத்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தபோது நாட்டை கொள்ளையடிக்கிறார் என்று கோஷமிட்ட எதிர்க்கட்சி, அப்போது அவரை ஆட்சியிலிருந்து அகற்ற தொடர்ந்து முயன்று, கடைசியில் வெற்றியும் கண்டிருந்தது.

பின்னர் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசு, ஆட்சிக்கு வந்த நூறு நாட்களிலேயே மத்திய வங்கியை காலியாக்கியது. ஒரு முறையல்ல, இரண்டு முறை. பிறகு உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் முன்னதாக தகவல் கிடைத்தும் மைத்திரியும் ரணிலும் தத்தமக்குள் மோதிக்கொண்டிருந்ததால் அதனை கவனிக்காது நாட்டை தகர்த்தனர்.

நல்லாட்சி அரசின் தவறுகளை சொல்லிக்கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி இங்கே விளக்கவேண்டிய ஒன்றல்ல. உங்கள் அனைவருக்கும் தெரிந்ததுதான்.

'கோட்டா கோ ஹோம்' என்ற கோஷம் ஆங்காங்கே பலமாகக் கேட்டாலும், மக்கள் ஐந்து வருடங்கள் என்னை ஆட்சிக்கு தெரிவுசெய்தார்கள். நான் அந்த ஐந்து ஆண்டுகளும் பதவியில் இருப்பேன் என்கிறார் ஜனாதிபதி.

அவர் போனால் யார் வருவார் என்பதோ, வருகின்றவர் என்ன செய்வார் என்பதோ யாருக்கும் தெரியாத ஒன்று. ஆனால், இந்த ஐந்து வருட மக்கள் ஆணைபற்றி சொல்கின்றபோது எனக்கு பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

எனது கிராமத்தவர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் பாட்டா காலணி விற்பனை கடைஒன்றை நடாத்திவந்தார்.

பாட்டா நிறுவனத்தின் விற்பனை முகவர் அவர். அதனால் பாட்டா நிறுவனம் தமது பொருட்களை இவருக்கு வழங்கிவிடும். ஒவ்வொரு மாதமும் பாட்டா நிறுவனத்திலிருந்து ஒருவர் வந்து, கடையில் விற்காமல் இருக்கும் பொருட்களை கணக்கிட்டு, அந்த மாதத்தில் எவ்வளவு பொருட்கள் விற்பனை ஆகியிருக்கின்றன என்பதை கணக்கிட்டு, இவர் விற்ற காலணிகளிற்கான அவரது கமிஷன் போக, மிகுதியை - இவர் கொடுக்கவேண்டிய பணத்தை அவரிடம் பெறுவார்கள்.

ஒரு பாட்டா கடைக்குப் போனவர்களுக்கு மனக்கண்ணில் இப்போது அந்த - அவர்கள் போயிருந்த கடை ஞாபகத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

கடையில் இரண்டு பக்கங்களிலும் அவர்களிடமுள்ள காலணிகளின் மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும், வாடிக்கையாளர் தனக்கு பிடித்த காலணியை காட்டினால், அவர்கள் உள்ளே சென்று அவருக்கு தேவையான அளவில் அந்த காலணியை ஒரு பெட்டியிலிருந்து எடுத்துத் தருவார்கள்.

காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் காலணியின் மறு சோடியும் அங்கே உள்ளே பெட்டியில் இருக்கும்.

எனது நண்பரின் கடைக்கு வாடிக்கையாளர்கள் வருகின்றார்களே தவிர, யாரும் காலணிகளை வாங்குவதாக தெரியவில்லை. காரணம் அவர்கள் கேட்கின்ற காலணிகள், அவர்களது அளவில் அங்கு கிடைக்கவில்லை.

அப்படி அவை முடிந்துவிட்டால், பாட்டா நிறுவனத்திடம் ஓடர் செய்தால் அவர்கள் உடனே விநியோகித்துவிடுவார்கள். பின்னர் விற்று முடிந்தால் விற்ற பணத்தை மாதம் முடிய எத்தனை விற்றிருக்கின்றது என்பதை பார்த்து பணம் செலுத்தலாம்.

ஆனால், அப்படி இருந்தும் வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு ஏன் அவர்கள் கேட்கும் அளவில் நீண்டகாலமாக கொடுக்கப்படவில்லை என்பது பாட்டா நிறுவனத்திற்கே ஆச்சரியம். பொருட்கள் இருக்கின்றன. ஆனால் வாடிக்கையாளர்களுக்கு விற்கிறார்கள் இல்லையே என்பது புரியாத புதிராக இருந்தது.

இதனால் பாட்டா நிறுவனத்தினர் வந்து கடையில் பரிசோதன செய்தபோதுதான் விசயம் தெரியவந்தது.

கடையில் விற்ற காலணிகளின் வெறும்பெட்டிகளை உள்ளே அடுக்கி வைத்திருந்திருக்கின்றனர். விற்க விற்க பணத்தை செலுத்தாமல், அங்கு பணியாற்றியவர்கள் அதனை எடுத்துவிட்டு, வெறும்பெட்டிகளை அடுக்கி வைத்திருந்தனர். மாதந்தோறும் பாட்டா நிறுவனத்தினர் வந்து கணக்கெடுக்கும்போது வெறும் பெட்டிகளை கணக்கெடுத்து விட்டு, இல்லாத பெட்டிகளுக்கு மாத்திரம் பணத்தை செலுத்த கேட்டிருக்கின்றனர்.

அதாவது, விற்ற பணம் முழுவதையும் பணியாளர்கள் ஏப்பம்விட்டுவிட, வெறும் பெட்டிகளை இருப்பாக காட்டி மோசடி செய்திருந்தனர்.

இந்த சம்பவம்தான் இப்போது ஞாபகம் வருகின்றது.

ஐந்து வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்த கடையை இப்படி காலியாக்கிவிட்ட பின்னரும், தானே அந்த கடையை நடாத்தவேண்டும் என்று நண்பர் முரண்டு பிடிக்கமுடியாதுதான்.

அந்த நண்பரின் கடை அன்று இருந்த நிலையில்தான் இன்று நமது நாடு இருந்துகொண்டிருக்கின்றது.

கடந்த பல வருடங்களாக, அது இந்த அரசு மாத்திரம்தான் என்றல்ல, அதற்கு முந்திய அரசுகளும் சேர்ந்துதான் நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றார்கள்.

நாட்டை யாரிடம் கொடுக்கவேண்டும் என்பதிலும் மக்கள் தெளிவுபெறவேண்டும். அப்போதுதான் நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்லமுடியும். மீண்டும் மீண்டும் செய்த தவறுகளையே செய்துகொண்டிருக்க முடியாது என்பதையும் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்!

**- ஊர்க்குருவி**

# ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய விலகமாட்டார்

## தினேஷ் குணவர்தன திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 11

போராட்டங்களுக்கு அஞ்சி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகமாட்டார்.

- இவ்வாறு ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாகப் போராட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் அமைச்சர் தினேஷ் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



"காலிமுகத்திடலில் விடுமுறை நாட்களில் பொழுதைக் கழிக்க வருவோரை ஒன்று திரட்டி ஜனாதிபதிக்கு எதிராகப் போராடவைத்துள்ளனர் எதிரணியினர்.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாலும் திரண்டு ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு மிரட்டுகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் அவர்களின் ஆதரவாளர்கள் நடத்தும் இந்தப் போராட்டங்களுக்கு அஞ்சி ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகமாட்டார்.

எமது ஜனாதிபதியோ, அரசதரப்பினரோ குறுக்குவழியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. நாட்டு மக்களின் அமோக ஆதரவுடன்தான் அவர்கள் ஆட்சிப்பீடத்தில் ஏறினார்கள்.

எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதியோ அல்லது அரசோ பதவி விலகுவது தீர்வு அல்ல. இன, மத, மொழி, கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காணமுடியும்" - என்றார்.(அ)






# வெள்ளத்தில் கொழும்பு வீதிகள்!

கொழும்பு, ஏப். 11

கொழும்பில் கடும் மழை பெய்து வருவதால், பல இடங்களில் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று முன் தினம் முதல் பெய்து வரும் கடும் மழையினால், வீதிகளிலும், தாழ்வான இடங்களிவும் வெள்ளம் தேங்கியுள்ளது.

அதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக இதுவரையில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும், மூவர் காயமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

புலத்கோபிடிய, இம்புல்பே, கேகாலை ஆகிய பிரதேசங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததிலேயே மூவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற வானிலையால் 9 மாவட்டங்களில் 128 குடும்பங் களைச் சேர்ந்த 471 பேர் இது வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 39 வீடுகள் முழுமையாகவும், 82 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# "கோ ஹோம் கோட்டா" கொரியாவிலும்!

கொழும்பு, ஏப். 11

தற்போதைய அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக நாட்டு மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டங்களுக்கு, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய, கொரியாவுக்கு தொழில் நிமித்தமாக சென்றுள்ள இலங்கையர்கள் குழுவொன்று அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu
11.04.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# பஸில் ராஜபக்ஷ சகாப்தம்?

பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் மற்றும் அதிருப்தியாளர்களின் கோபத்துக்குரிய ஒருவராக, பஸில் ராஜபக்ஷவே இருக்கின்றார். பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை பொறுத்தவரையில், இந்த பிரச்னைகள் அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது, பஸில் ராஜபக்ஷ தான். பஸில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்தே, உள் முரண்பாடுகள் சூடுபிடிக்கத் தொடங்கின. இறுதியில் பஸில் ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கோட்டாபயவின் வெற்றிக்கு பஸில் ராஜபக்ஷ பிரதான பங்கு வகித்ததாக ஒரு கருத்துண்டு. குறிப்பாக பொதுஜன பொரமுன என்னும், அறிமுகமில்லாத கட்சியொன்றை, சிங்கள மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி, அதனை நோக்கி மக்களை கொண்டுவந்ததில் பஸில் பிரதான பங்குவகித்ததாக கூறப்படுகின்றது. அந்த வகையில் அவர் ஒரு சிறந்த அரசியல் ஒருங்கிணைப்பாளர் என்னும் பார்வை, பொதுஜன பெரமுனவினர் மத்திலுண்டு. ஆனால் அதே வேளை, 2015 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்விடைந்தமைக்கும், பஸில் ராஜபக்ஷதான் காரணமென்னும் பார்வையும் உண்டு. 2015 இல், மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தபோது, விமல் வீரவன்ஸ அவ்வாறானதொரு குற்றச்சாட்டை பகிரங்கமாக முன்வைத்திருந்தார். பஸில் சிறந்த ஒழுங்கமைப்பாளராக இருந்தபோதும் கூட, அனைவரையும் கவரக் கூடியதொரு தலைவராக இல்லையென்னும் அபிப்பிராயமும் தென்பகுதியில் உண்டு.

ராஜபக்ஷ ஆட்சியில் அவர்களது குடும்பத்தின் செல்வாக்கு தவிர்க்க முடியாதவொன்றாகவே இருந்திருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எது நடந்ததோ- அதுவே கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் நடந்திருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, சாமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரிலிருந்து தன்னைச் சற்று வித்தியாசமானவாராகவே காண்பிக்க முயற்சித்திருந்தார். ராஜபக்ஷக்களின் அரசியல் குறீடான, குரக்கன் சால்வையை கோட்டாபய புறம்தள்ளியிருந்தார். ஏனைய ராஜபக்ஷக்கள் அணிவது போன்ற ஆடைகளையும் புறக்கணித்திருந்தார். இதன் மூலம் தன்னை, அவர்களிலிருந்து வேறுப்படுத்திக் காண்பிக்க முயற்சித்திருந்தார். ஆனால் அவரால், தனது குடும்ப செல்வாக்கிலிருந்து விலகி நிற்க முடிய வில்லை. குடும்பத்தை அரசியலிலிருந்து விலக்கிவைக்க முடியவில்லை. இதுவே இப்போது பிரச்னையாகியிருக்கின்றது.

கோட்டாபயவுக்கு பின்னர், பஸில்தான், என்னும் கதை உலவியது. ஆனால் அந்தக் கதை இனிமேல் அரங்கேறுவதற்கான வாய்புக்கள் மிகவும் குறைவு. ஏனெனில் பஸில் சகாப்தம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது போன்றே தெரிகின்றது. ஏதேனும் அதிசயங்கள் இடம்பெற்றாலன்றி, பஸில் ராஜபக்ஷ மீளவும் பொதுஜன பெரமுனவுக்குள் செல்வாக்கை பெறுவது முயல் கொம்பாகும்.

இந்த நெருக்கடியின் மூலம் ராஜபக்ஷ குடும்பத்துக்குள் தலைமைத்துவ நெருக்கடியொன்று ஏற்பட்டிருப்பது தெட்டத்தெளிவானது. கோட்டாபயவிற்கு பின்னர், பஸில் ராஜபக்ஷ என்னும் பார்வையே இருந்தது. இவ்வாறானதொரு நோக்கத்தினடிப்படையில்தான், பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக உள் நுழைந்தார்.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதன் ஊடாக அடுத்த தலைவர் தான் தான் என்னும் நிலையை கட்சிக்குள் ஏற்படுத்தவே அவர் முயற்சி செய்திருந்தார். அவர் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டபோது, பொதுஜன பெரமுனவின் கீழ்மட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மத்தியில் அவ்வாறானதொரு பார்வையே மேலோங்கியிருந்தது. ஆனால் தற்போது அனைத்தும் புஸ்வாணமாகியிருக்கின்றது. பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டபோது, ஈழநாடு ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது. அதாவது, இலங்கையின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு நபர்களை மாற்றுவது ஒருபோதும் தீர்வாகாது என்பதை நாம் சுடடிக்காட்டியிருந்தோம். ஏனெனில், எந்த நபர் வந்தாலும் இந்த நெருக்கடியை தீர்க்க முடியாது. இந்த நெருக்கடியை தீர்க்கவேண்டுமாயின், சரியான திட்டமிடலுடன், சர்வதேச நாணய நிதியத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதையும் ஈழநாடு சுட்டிக்காட்டியிருந்தது. ஆனால் ஜனாதிபதியால் அதனைச் செய்ய முடியவில்லை. அனைத்து அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்தபோதிலும், அவர் தனது குடும்ப வட்டத்துக்குள் சிக்கியிருந்தார். நிதியமைச்சர் மாற்றப்பட்டார். மத்திய வங்கி ஆளுநர் மாற்றப்பட்டார். வெளிநாட்டு அமைச்சர் மாற்றப்பட்டார். ஆனால் பிரச்னைகள் அப்படியே இருக்கின்றன. இந்த அடிப்படையில் நோக்கினால், பஸிலின் ஜனாதிபதி கனவு, பகல் கனவாகிவிட்டதாகவே தெரிகின்றது.

# மு.க.ஸ்டாலினின் கருணையும், கூட்டமைப்பின் பெருந்தன்மையும்!

அலசுவது இராஜதந்திரி

இலங்கையில் வரலாறு காணாத வகையில் சகல இனத்தவர்களையும் மதத்தவர்களையும் ஒன்றிணைத்து இன்றைய அரசுக்கெதிராக ஓங்கி குரலெழுப்பிய ஆரப்பாட்ட நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் இடம் பெற்றிருந்தது.

இதில் அனைவரையும் நேற்று முன்தினம் கவர்ந்த நிகழ்வு என்னவெனில் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய இஸ்லாமிய மக்கள் சூரிய அஸ்தமனத்துக்கு பின்னர் தமது ரமழான் நோன்பை திறக்கின்ற வழிபாட்டை காலி முகத்திடலிலேயெ நடத்தியமையாகும். காலிமுகத்திடல் வீதியில் அமர்ந்தவர்களாக நோன்பு திறக்கும் வழிபாட்டை நடத்தியதோடு அதன்பின்னர் அங்கிருந்தவாறே தமது உணவையும் அருந்தியிருந்தனர். அச்சமயம் அருகிலிருந்த மக்களோடுகூட அவர்கள் தமது உணவைப் பகிர்ந்து கொண்டனர்.

கொழும்பு நகரிலேயே பெரிதும் இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டங்கள் தற்போது நாடளாவிய ரீதியில் பரவலாக இடம்பெற்று வருவதையே அவதானிக்க முடிந்தது.

இலங்கையின் பொருளாதாரம் மூன்று தசாப்தகாலமாக நிலவிய அசாதாரணமான வடக்கு-கிழக்கு நிலவரத்தின்போதுகூட இன்றிருப்பது போல மோசமான கட்டத்தை அடைந்திருக்கவில்லை.

ஆனால் இன்று சுதந்திர இலங்கையின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு இலங்கையின் பொருளாதார நிலவரம் மோசமடைந்திருப்பதோடு இலங்கையின் ஓர் அரச தலைவருக்கெதிராக பேரலையாக எதிர்ப்பலைகள் கிளம்பியிருப்பதுகூட இதுவே முதல் தடவை என்றே குறிப்பிட முடியும்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலவரத்தை சமாளிக்கும் வகையில் இந்திய அரசு பெருந்தொகையான நிதி உதவியோடு அதிகளவில் எரிபொருளையும் வழங்கியுள்ளது.

இந்திய மத்திய அரசு இலங்கைக்கு பெருமளவு உதவியை வழங்கியுள்ள அதே சமயம், தமிழ் நாடு மாநிலமும் இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அசாதராண நிலபரம் முடிவுக்கு வரும் வரை இவ்விரு மாகாணங்களின் மக்களும் மிகப்பெருமளவில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தனர். அப்போதெல்லாம் அம்மக்களின் கஷ்டங்களை கருத்தில் கொள்ளாது இராணுவ நடவடிககைகளையே இலங்கை அரசு மிகைப் படுத்தியிருந்தது.

இலங்கையில் இராணுவ நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தபோது பாதுகாப்புச் செயலாளராக இருந்தவரே இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அச்சமயம் தமிழகத்தில் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தந்தையாரான முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி யுத்தத்தை நிறுத்தும்படி உண்ணாவிரதமும் இருந்தார். அத்துடன் தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்று வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு ஆதரவாக கலைஞர் மு. கருணாநிதி குரல் கொடுத்திருந்தார்.

கலைஞர் மு.கருணாநிதியின் புதல்வாரன இன்றைய முதலமைச்சர் தமிழக மக்களின் இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் மீதான அனுதாபத்தையும் கரிசனையையும் வெளிப்படுத்தும் விதத்தில் உணவு மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கு முன்வந்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளார். இந்தியா இலங்கைக்கு எரிபொருளையும் வழங்கி, பில்லியன் கணக்கில் டொலர்களையும் உதவியாக வழங்கியுள்ள தருணத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவிசெய்ய முன்வந்துள்ளதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. அதேசமயம், தமிழக முதலமைச்சரிடம் வடக்கு-கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல. இலங்கையர்கள் அனைவருக்குமே உதவி செய்ய முன்வாருங்கள் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுள்ளது. இதன்மூலம் தமிழ் ட்டமைப்பின் தேசாபிமானம் நன்கு புலப்படுகின்றது.


தென்னிலங்கை பேரினவாத அரசியல்வாதிகள் மட்டத்திலே இலங்கையின் சுயாதிகத்துக்கு எதிரானவர்கள் என்ற அபிப்பிராயமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக நிலவுகின்றது.

ஆனால் இலங்கையில் தமது அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுத்து வருகின்றது.

தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் பரந்துபட்ட பார்வை ஐக்கிய இலங்கையாகவும் அதனூடாகவே வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்ற எண்ணக்கருவாகவும் பிரதிபலித்துள்ளது.

இதன் வெளிப்பாடாகவே தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் முழு இலங்கையர்களுக்கும் தமிழகம் உதவ முன்வரவேண்டுமென்று விடுத்துள்ள கோரிக்கை விளங்குகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். வசதி பெருகும். குடும்பத்தினர் உங்களை பெருமிதப்படுத்துவர். மகிழ்ச்சி கூடும். உங்களது கோபத்தை தூண்டியவர் மன்னிப்புக் கேட்பார்.

**இடபம்**
பணவரவு கூடும். பணியைப் பரபரப்பாக முடிப்பீர்கள். நீங்கள் எடுத்த விஷயத்தை செய்து முடிக்க காலதாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்**
தொழிலில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள். துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியைத் தரும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். கடன் குறையும்.

**கடகம்**
வியாபாரிகளுக்கு பணியாட்கள் மூலம் நன்மை உண்டாகும். எந்தவொரு விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும்.

**சிம்மம்**
மேலதிகாரிகள் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். கல்விக்கான செலவு கூடும். சாதகமான பலன்கள் கிடைக்கும். நிதானத்தைக் கடைபிடித்தால் வீண் பிரச்னை ஏற்படாது.

**கன்னி**
பிறருக்கு வாக்குறுதியை அளிக்கும் முன் யோசிப்பது நல்லது. முக்கிய முடிவு எடுக்கும்போது அனுபவசாலியின் ஆலோசனையை பெறுங்கள். மற்றவர்களைப் பற்றி விவாதிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்**
தடைகள் நீங்கி எடுத்த விஷயத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்துச் சென்று நன்மை காண்பீர்கள். அலுவலக ரகசியத்தை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது.

**விருச்சிகம்**
பணியிடத்தில் புதிய அனுபவம் கிடைக்கும். சோர்வு நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சேமிப்பில் ஆர்வம் கூடும். பரபரப்பான நாள். புதிய தீர்மானம் ஒன்றை எடுப்பீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் இருக்கும் ஒருவருக்கு அதிகப்படியான வருமானம் வரும். சகபணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர். குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக அதிகம் பாடுபடுவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். நட்பு வட்டம் விரியும். உங்களது பேச்சினால் நன்மை விளையும். நிம்மதி கூடும். வீண் பழி தரும் செயல் எதையும் செய்ய வேண்டாம்.

**கும்பம்**
தந்தையின் உடல்நலம் மேம்படும். கவலை தீரும். பணியாளருக்கு சிறப்பான நன்மைகள் ஏற்படும். கலை ஆர்வம் வரும். பயம் தீரும். வீண் வம்புகளில் மாட்ட வேண்டாம்.

**மீனம்**
உங்களது பேச்சினால் நன்மை உண்டாகும். அதிகம் உழைப்பீர்கள். கவலைப்படாமல் உங்களது கடமைகளை செய்து முடிப்பது நல்லது. தாமதமாகி வந்த வாய்ப்புகள் அனைத்தையும் கைவரப்பெறுவீர்கள்.

# அதிமுகவில் இரட்டைத்தலைமைக்கு எதிர்ப்பு வலுக்கின்றது! மீண்டும் சசிகலா?

சென்னை, ஏப்.11

தமிழகம், தேனியில் பண்ணை வீட்டில் தங்கியுள்ள அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வத்தை சந்திக்க தினமும் நூற்றுக்கணக்கான அதிமுகவினர் அணிவகுக்கும் நிலையில், சேலத்திற்கு சசிகலா பயணம் மேற்கொள்ளவுள்ளது அதிமுக பரபரப்பை கூட்டியுள்ளது.

சட்டமன்ற தேர்தல், ஊரக உள்ளாட்சி தேர்தல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் என அடுத்தடுத்த பலத்த அடியை அதிமுக சந்தித்துள்ள நிலையில் அடுத்ததாக இரு ஆண்டுகளில் நடக்கவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தங்கள் பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

தற்போது உட்கட்சி தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், மாவட்ட செயலாளர்களை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை சில மூத்த நிர்வாகிகள் கட்சி தலைமையிடம் கூறியதாகவும், இதற்கு முக்கிய மாவட்ட செயலாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகின.

கடந்த சில மாதங்களாகவே சென்னையில் தங்குவதை விரும்பாத அதிமுக ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள கைலாசபட்டி பண்ணை வீட்டில் தங்கியிருக்கிறார். தற்போது தொடர்ந்து 10 நாட்களுக்கும் மேலாக ஓ பன்னீர்செல்வம் அங்கு தங்கி இருப்பதற்கு முக்கிய காரணம் உண்டு என கூறுகின்றனர் அதிமுக மூத்த நிர்வாகிகள். சென்னையில் இருக்கும் போது அதிமுக முக்கிய பிரமுகர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை சந்திப்பது, எதிர் தரப்பினருக்கு உடனடியாக தெரிவதாகவும், இதனால் அவரை சந்திக்க முடியாமல் நிர்வாகிகள் சங்கடத்தில் இருந்தனர்.

இதன் காரணமாகவே பெரியகுளத்தில் தனது சொந்த வீட்டில் இருப்பதை விட கைலாசபட்டி பண்ணை வீட்டில் இருப்பதை ஓ.பன்னீர் செல்வம் தேர்ந்தெடுத்துள்ளார்.

தற்போது அங்கிருந்து வெளியாகியிருக்கும் தகவல்படி சசிகலாவை அ.தி.மு.கவில் சேர்க்கலாமா? வேண்டாமா? என்பது தான் முக்கிய கருப்பொருளாக விவாதிக்கப்படுகிறது. கட்சியில் தனக்கு தொடர்ந்து முக்கியத்துவம் குறைந்து வருவதாக அவர் கருதுவதும் சசிகலா கட்சிக்குள் வந்தால் தனக்கு பழைய செல்வாக்கு மீண்டும் கிடைக்கும் என கருதுவதாக கூறப்படுகிறது.

சட்டமன்ற தேர்தல் தோல்வி எதிரொலியாக அ.தி.மு.கவில் இரட்டை தலைமை வேண்டாம், சசிகலா தலைமையில் அதிமுகவை மீட்டு எடுப்போம் என கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் தீர்மானங்களை நிறைவேற்றி வரும் நிலையில், வருகிற ஏப்ரல் 11ஆம் தேதி சேலம் மாவட்டத்திற்கு சசிகலா சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார் .



# மார்க்சிஸ்ட் மாநாட்டில் காங்கிரஸ் தலைவர் கலந்துகொண்டதால் பரபரப்பு!

திருவானந்தபுரம், ஏப்ரல் 11

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் நடைபெற்ற சம்பவம் ஒன்று கேரள அரசியலை உலுக்கி உள்ளது.

கேரளாவில் இருக்கும் கன்னூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அந்த விழாவில் கலந்துகொண்டு நீண்ட நேரம் உரையாற்றினார்.

மாநில மத்திய அரசின் உறவு மற்றும் உரிமைகள் பற்றி முதல்வர் ஸ்டாலின் இதில் பேசினார். இதில் கலந்து கொண்ட கேரள முதல்வர் பினராயி விஜயன் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினை புகழ்ந்து பேசினார்.

இந்த நிகழ்வில் காங்கிரஸ் மூத்த தலைவர் கேவி தாமஸ் கலந்து கொண்டார். இவர் முன்னாள் மத்திய அமைச்சர் மற்றும் முன்னாள் எம்பி என்பது குறிப்பிடத்தக்கது. கேரளாவில் தமிழ்நாடு போல கிடையாது. அங்கு காங்கிரஸ், சிபிஎம் ஆகிய கட்சிகள் பரம எதிரிகள். இரண்டு கட்சிகளும் பிரதான எதிர் எதிர் துருவங்கள். இந்த நிலையில்தான் இந்த மாநாட்டில் காங்கிரசின் கேவி தாமஸ் கலந்து கொண்டார்.

ஆனால் இது கட்சி சார்ந்த நிகழ்வு. அரசு நிகழ்வு ஒன்றில் கேவி தாமஸ் கலந்து கொள்கிறார் என்றால் பிரச்சனை இல்லை. ஆனால் இவர் கட்சியின் நிகழ்வில் கலந்து கொண்டார். இதுதான் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிகழ்வில் கேவி தாமஸ் கலந்து கொள்ள கூடாது என்று ஏற்கனவே கேரள காங்கிரஸ் அவருக்கு எச்சரிக்கை விடுத்து இருந்தது.

காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி கூட்டத்தில் கலந்து கொண்டது மட்டுமின்றி.. அந்த நிகழ்ச்சியில் பினராயி விஜயனையும் இவர் பாராட்டியது காங்கிரஸ் தரப்பை கொதிக்க செய்துள்ளது.



# சீதாராம் யெச்சூரி மீண்டும் தெரிவு!

டெல்லி, ஏப்ரல் 11

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொது செயலாளராக சீதாராம் யெச்சூரி தொடர்ந்து 3வது முறையாக நேற்ற தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் இடது ஜனநாயக முன்னணி ஆட்சி நடக்கிறது. இங்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பினராயி விஜயன் முதல்வராக உள்ளார். இந்நிலையில் கேரளா கண்ணூரில் உள்ள சிஎச் கணாரன் நகரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23வது அகில இந்திய மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டின்போது சீதாராம் யெச்சூரி கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

## புனிதவாரம்



மார்த்தா மரியா குடும்பத்தின் உற்ற நண்பரான இயேசு பெத்தானியாவில் மார்த்தா மரியா வீட்டில் தங்கினார். அங்கு நடந்த நிகழ்ச்சியைத் தான் புனித யோவான் இன்றைய நற்செய்தியாகத் தருகின்றார்.

நம்மை ஒருவர் அன்பு செய்கின்றார் என்றால் நாமும் அவரின் அன்புக்கு பதில் அன்பு செய்வது வழக்கம். அதுபோல் தான் மரியாவும் இயேசுவின் காலடியில் அமர்ந்து அவரது வார்த்தைக்கு செவிசாய்த்தவள். இயேசுவுக்குத் தம் இல்லத்திலும், உள்ளத்திலும் சிறப்பிடம் அளித்தார். அந்த அன்பின் வெளிப்பாடே விலையுயர்ந்த நல்ல பரிமளத்தைலம் கொண்டு வந்து ,யேசுவின் பாதங்களில் பூசினாள். இங்கு "விலையுயர்ந்த" மற்றும் "நல்ல" என்ற ஒவ்வொரு சொற்களும் மரியாளின் அன்பிற்குச் சான்று. தலைக்கு எண்ணெய் பூசி வரவேற்பதையே ஒருவர் பெருமையாக எண்ணுவர். மரியாவோ இயேசுவின் தலையைத் தொட அருகதை அற்றவராய் பாதங்களில் எண்ணெய் பூசி, அதைத்தன் கூந்தலால் துடைத்தாள். மற்றவர் பாதங்களை துடைப்பது ஒரு பெண் செய்யும் செயல் அன்று. சுற்றுச்சூழலைப் பற்றியும் கவலைப்படாது அன்புப் பணி புரிகின்றாள் மரியா.

யூதாஸ் இஸ்காரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுக்க விலை பேசியவன். பணத்தாசை பிடித்தவன். எனவே தான் "மண்ணுலகில் உங்களுக்கென செல்வத்தை சேமித்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அழித்து விடும்" (மத் 6:19) என்று இயேசு எச்சரிக்கின்றார். இறைவனை நிராகரிப்பதை விட அவருக்காக எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். குறிப்பாக இத்தவக்காலத்தில் இயேசுவுக்காக நாம் எம்பிடமுள்ள பாவப்பழக்க வழக்கங்களை விட்டு விட்டு அவரது இரக்கத்தில் வாழ முயற்சிப்போம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# அரசின் இருப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### கூறுகிறார் எஸ்.பி. திஸநாயக்க

கொழும்பு, ஏப். 11

**"அரசின் இருப்புக்கு பெரிதாக அச்சுறுத்தல் எதுவும் இல்லை." _ என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:**



அரசுக்கான ஆதரவை 40 பேர் விலக்கிக்கொண்டிருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் அரசுக்கு ஆதரவாக 117 ஆசனங்கள் உள்ளன. அதேபோல சுயாதீனமாக செயற்படுவதற்கு முடிவெடுத்துள்ளவர்கள் சஜித் அணிக்கு சார்பாக வாக்களிக்கமாட்டார்கள். எனவே, அரசின் இருப்புக்கு அச்சுறுத்தல் இல்லை.

தொடர்ச்சியாக 8 மணிநேரம் மின்வெட்டு அமுலில் இருக்கும்போது, எனக்கே அரசுக்கு எதிராக போராட வேண்டும் என்ற எண்ணம் வருகின்றது.

மக்களின் கோபம் நியாயமானதே. அதற்காக மன்னிப்பு கோருகின்றோம். இந்நிலைமையில் இருந்து மீள நாம் ஒன்றுபடவேண்டும். ஜனாதிபதியை போ சொல்வது தீர்வு அல்ல-என்றார். (அ)

# நள்ளிரவிலும் நடந்த போராட்டம்





கொழும்பு, ஏப். 11

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பில் ஆரம்பமான போராட்டம் நேற்று முன் தினம் நள்ளிரவிலும் நடந்தது.

கொழும்பின் பல பகுதிகளிலிருந்தும் திரண்ட 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொழும்பு காலி முகத்திடலில் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் அனைத்து இன மக்களும் பங்குகொண்டனர்.

குறிப்பாக இஸ்லாமியர்கள் இந்த போராட்டத்தில் பங்கேற்றிருந்த நிலையில், அவர்கள் அனைவரும் போராட்டத்திற்கு மத்தியில், நடு வீதியில் அமர்ந்து இறை வழிபாட்டுடன் நோன்பை திறந்த சம்பவம் இடம்பெற்றது.

இவர்களின் இறை வழிபாட்டு நிகழ்வுகளுக்கு தமிழ், சிங்கள மக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர் என்று ஆர்ப்பாட்டக்களத்திலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ)

# இம்மாதம் தேவையான எரிபொருள் இறக்குமதி

கொழும்பு, ஏப். 11

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் இந்த மாதத்திற்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்காக, 700 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த மாதத்திற்காக இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் டீசலும், ஒரு லட்சத்து பத்தாயிரம் மெற்றிக் தொன் பெற்றோலும் தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

எரிபொருளுடனான கப்பல்கள் பல அடுத்த வாரம் நாட்டிற்கு வரவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க மேலும் கூறினார். (அ)

# பட்டாசு உள்ளிட்ட வெடிபொருட்களின் விலைகள் உயர்வு!

கொழும்பு, ஏப். 11

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, பட்டாசு உட்பட கேளிக்கை வெடிபொருட்களின் விலைகள், குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாக, உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் தெரிவிக்கின்றனர்.

மூலப்பொருட்களின் விலைகள் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரித்தமையே இதற்கு காரணமாகும் என கிம்புலாபிட்டியில் சிறிய அளவில் பட்டாசு மற்றும் கேளிக்கை வெடிபொருட்களை உற்பத்தி செய்யும் பணிகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இம்முறை பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடிபொருட்களின் விற்பனையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு உள்ளிட்ட காரணங்களினால் மக்கள் இவ்வாறு கேளிக்கை வெடிபொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வமின்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வவுனியாவில் குருமார் அமைதிப் போராட்டம்!

வவுனியா, ஏப். 11

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில் இருந்து நாடு மேம்பட வேண்டி "தந்தையே எமது தேசத்தை விழித்தெழ செய்வீர்" என்ற தொனிப்பொருளில் அமைதிப்பேரணியொன்று நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

கிறிஸ்தவ மதகுருமாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பேரணி வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அவ்விடத்தில் சிறிது நேரம் அமைதியான முறையில் தமது சுலோகங்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன் பின்னர் கண்டி வீதி வழியாக பழைய பஸ் நிலையத்தை அடைந்த பேரணி அங்கும் தமது சுலோகங்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

கிறிஸ்தவ அருட்தந்தையர், அருட் சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார் 70 பேர் வரையில் கலந்துகொண்ட இந்த பேரணியில்-

ஒரு நாடும் 225 திருடர்களும், இலங்கையர் என்ற அடையாளத்தை கட்டியெழுப்புவோம், அரசியல்வாதிகளே இனவாதம் பேசுவதை தவிருங்கள், புதிய அரசியல் அமைப்பில் நீதி கிட்டுமா, மூன்றுவேளை உணவு ஒரு வேளை உணவானது போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (அ)



# ராஜபக்ஷ குடும்பத்தினர் பதவி விலகாவிடின் மக்கள் சரியான தீர்ப்பை விரைவில் வழங்குவர்

## முன்னாள் எம்.பி நஸீர் கனடாவில் தெரிவிப்பு

மொன்றியல், ஏப். 11

**நாட்டைக்கொண்டு செல்ல முடியாதவர்கள் உடனடியாக பதவி விளகி நாட்டை நடாத்தக் கூடியவர்களிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் செல்லவேண்டும். இல்லை என்றால் நாட்டு மக்கள் சரியான தீர்ப்பினை மிக விரைவில் வழங்குவிர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.**





ராஜபக்ஷ அரசுக்கு எதிராக கனடாவில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக நாட்டிலுள்ள தலைவர்கள் எதிர்நோக்காத எந்தவொரு பாரிய எதிர்புக்களையும், அவமானங்களையும் எமது நாட்டின் ஜனாதிபதி எதிர்நோக்கி வருகின்றார். அவருக்கு எதிரான போராட்டங்கள் இலங்கையில் மட்டுமல்லாமல் உலக நாட்டிலுள்ள சகல இலங்கையர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாமும், எமது நாடும் கடன் சுமையால் ஏற்கெனவே தத்தளித்துக் கொண்டிறிக்கின்றது. ஆனால் ராஜபக்ஷ குடும்பத்தினர் இதைக் கவனிக்காது கடனுக்கு மேல் கடன்பட்டு நாட்டை கொள்ளையடித்து கடன் சுமையை இன்னும் பல மடங்குகளாக அதிகரிக்கச் செய்துவிட்டார்கள். அதுமாத்திரமின்றி நாட்டையும் மக்களையும் வேறு நாட்டுக்கு விற்றுவிட்டு தப்பிச் செல்லும் நிலைமையில் இருந்து வருகின்றனர்.

ராஜபக்ஷக்களின் செயல்பாட்டை அறிந்த மக்களும், சில அரசியல்வாதிகளும் அதற்கொதிராக குரல் கொடுத்தனர்.

அவ்வாறானவர்களை ராஜபக்ஷ குடும்பத்தினர் ஏதோ ஒரு வழியில் வாய் பேசாதவாறு செய்துவிடுகின்றனர். இந்நிலைமையில் அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர், பல பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டை முடக்கும் யுக்திகளைக் கையாண்டு அவர்களின் செயற்பாடுகளை யும் முடக்கினர். இவை அனைத்துக்கும் எதிராக பொதுமக்கள் பொங்கி எழுந்து இனமத வேறுபாடுகளுக்கப்பால் இணைந்து கொண்டு வீதிக்கு இறங்கினர்.

இந்தப் போராட்டம் இன்று தீயாய் மாறி உலக நாடுகளினதும், மக்களினதும் எதிர்ப்புக்களுக்கு ராஜபக்ஷ அரசு ஆளாகியுள்ளது. எமது நாடு ராஜபக்ஷ குடும்பத்தினர் கையில் இன்னும் இருக்குமாக இருந்தால் பாரிய அழிவுப்பாதைக்குச் சென்றுவிடும். அதற்கு முதல் ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டை நடத்தக்கூடியவர்களின் கையில் கொடுத்துவிட்டு அவர்கள் வீடு செல்லவேண்டும். இல்லை என்றால் அவர்களுக்கு எவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை-என்றார். (அ)

# மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு!

## இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் 3 மாத காலம் மிகவும் சவாலான காலமாக இருக்கும் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அந்த சங்கத்தினர், பல வைத்திய சாலைகளில் அவசர சிகிச்சைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

பல வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நோயாளி ஒருவரை வைத்திய சாலையில் அனுமதிப்பதற்கு முன்னர் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் இலங்கை மருத்துவர் சங்கத்தின் செயலாளர் விசேட வைத்தியர் இஷான் டி சொய்சா தெரிவித்தார். (அ)

# அமெரிக்க பயணத்தை இரத்து செய்தார் பஸில்

கொழும்பு, ஏப். 11

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது அமெரிக்க பயணத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவர் முன்னர் அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தார்.

அதன் பின்னர் கலிபேர்னியாவில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லவும் திட்டமிட்டிருந்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையில் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்கான தனது பயணத்தை இரத்துச் செய்துள்ளதாக அறிய முடிகிறது. (அ)

## தொடரும் சீரற்ற காலநிலை;

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 11

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் உருவாகியுள்ள கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக பல இடங்களில் பரவலாக மழை பெய்து வரும் நிலையில் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலையின் காரணமாக மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கொழும்பு, களுத்துறை, கண்டி, பதுளை, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மையம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (அ)

# கடும் பொருளாதார நெருக்கடி தேயிலை ஏற்றுமதியும் பாதிப்பு

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் எரிசக்தி நெருக்கடி காரணமாக சர்வதேச ரீதியாக இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த பெருமளவிலான ஆடை மற்றும் தேயிலை கொள்வனவு கட்டளைகள் நிறுத்தப்பட்டுள் ளதாக தெரியவருகிறது.



இந்த கொள்வனவு கட்டளைகளில் பெரும்பாலானவை இந்திய சந்தைக்கு சென்றுள்ளதாக த இக்கனோமிக் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. தினமும் நீண்ட நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுவதன் காரணமாக ஆடை உற்பத்திகள் பாதிக்கப் பட்டுள்ளன.

அத்துடன் தேயிலை கொழுந்தின் தரமும் குறைந்துள்ளது. இந்த நிலைமை காரணமாக எதிர்காலத்தில் மேலும் பாரதூரமான நெருக்கடியை இலங்கை எதிர்நோக்க நேரிடும் என பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இலங்கை தேயிலை மற்றும் தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் வருடாந்தம் பல பில்லியன் டொலர்களை வருவாயாக ஈட்டி வந்துள்ளது. ரஷ்யா, உக் ரைன் போன்ற நாடுகளுக்கு தேயிலை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

அந்நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட போர் காரணமாக தேயிலை ஏற்றுமதியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடு களுக்கு இலங்கையில் இருந்து தைத்த ஆடை கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் எரிசக்தி நெருக்கடி காரணமாக ஆடை உற்பத்தி தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி

# வெளிநாடுகளுக்கு செல்லும் மக்கள்!

கொழும்பு, ஏப் .11

நாட்டில் நிலவும் அபாயகரமான சூழ்நிலை காரணமாக வேறு நாடுகளுக்குச் செல்லும் நோக்கத்தில் கடவுச்சீட்டு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை 30 முதல் 40 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு முழுவதும் வீடுகள் , வாகனங்களை விற்பனை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் வெளிநாடு செல்வதற்காக பணத்தை தேடிக்கொள்ள இவ்வாறு வீடு வாகனங்கள் விற்கப்படுவதாக தெரியவந்துள்ளது

இதேவேளை, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் இந்நாட்டில் வசிக்கும் தமது நெருங்கிய உறவினர்களை தாங்கள் வசிக்கும் நாட்டுக்கு அழைத்து கொள்வதும் அதிகரித்து காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தெருவெளி அரங்க கலைஞர் பாலா மாஸ்டர் காலமானார்!



யாழ்ப்பாணம், ஏப். 11

போர்க்காலத்தில் தெரு வெளி அரங்க நாடகங்களின் நெறியாளராகவும் அரங்காற்று கையாளராகவும் பெயர் பெற்று விளங்கிய பாலா மாஸ்டர் என்றழைக்கப்படும் சரவணை பாலசிங்கம் மாரடைப்பு காரணமாக காலமானார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 1995 இடப்பெயர்வுடன் வன்னிக்கு இடம்பெயர்ந்த அவர், வன்னியில் அரங்கேறிய ஆயிரக் கணக்கான தெருவெளி அரங்க (வீதி நாடகங்கள்) ஆற்றுகை யில் பிரதான பங்காளர்களில் ஒருவராக விளங்கியிருந்தார்.

தெருவெளிக் கலைஞர்கள் சைக்கிள்களில் பயணித்து ஆற்றுகை செய்த காலங்களில் அவர்களுடன் கூடவே பயணித்து பல தெருவெளிநாடகங் களை நெறிப்படுத்தியிருந்தார்.

போர்க்காலப் படைப்புக்கள் தவிர தொற்றுநோய், சமூக விழுமியங்கள் சார்ந்த பல்வேறு படைப்புக்கள் ஊடாக வன்னியில் தெருவெளி அரங் கப் படைப்புக்கள் மக்களைச் சென்றடைந்து வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாலா மாஸ்டரின் இறுதி நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம், இருபாலை, பழம் வீதியில் உள்ள அவருடைய இல்லத்தில் நடைபெறும் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

# ராஜபக்ஷ குடும்பத்தையும்,அரசையும் நிச்சயமாக வீட்டுக்கு அனுப்புவோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



**கொழும்பு, ஏப். 11**

**மக்களை அழித்து, நாட்டுக்கு அழிவைக் கொண்டு வந்த ராஜபக்ச தலைமுறையும், ராஜபக்ச அரசையும் நிச்சயமாக வீட்டுக்கு அனுப்புவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அத்துடன் நின்று விடாது வரம்பற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாமல் ஒழிக்கப்படும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் ஆசியை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்த ஐக்கிய கமத் தொழிலாளர் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளின் பேரணி நேற்று முன்தினம் தெஹியத்தகண்டி நகரில் நடைபெற்றது.

இந்தப் பேரணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை தாங்கியிருந்தார். அப்பகுதி விவசாயிகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவாகக் கையை உயர்த்தி ஆதரவு தெரிவிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இதைய டுத்துப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் பதிலுக்குக் கைகளை உயர்த்தி அதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஜனாதிபதி பதவியாக இருக்கட்டும், பிரதமர் பதவியாக இருக்கட்டும், அது ஒரு அமைச்சுப் பதவியாக இருக்கட்டும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியாக இருக்கட்டும், இவை அனைத்தும் தங்கள் குடும்ப வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கான தொழிலாக கருதிக்கொள்ளக்கூடாது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டு மக்களின் நலன் மேம்பாட்டுக்காவே மக்கள் இந்தப் பதவிகளை வழங்குகிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

சீர்கெட்ட ராஜபக்ஷ ஆட்சியின் முடிவு மிக அருகில் உள்ளது எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டையும் மக்களையும் அழிவுக்கு இட்டுச் சென்ற ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பொதுமக்களும் அணி திரண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (அ)

# தமிழக முதல்வரின் உதவி கரங்கள் இன வரம்பில்லாமல் நீளவேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஏப். 11

தமிழக முதல்வரின் உதவிக் கரங்கள் இன வரம்பில்லாமல் எல்லா இலங்கையருக்காகவும் நீள வேண்டுமென கோருகின்றோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் சிங்கள மக்களுக்கும் இந்தியா உதவிகளை வழங்கவேண்டும் என அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுகாதார அவசர நிலையை பிரகடனப்படுத்தவேண்டும்

## மருத்துவர் சங்கம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் சுகாதார அவசரநிலையை பிரகடனப்படுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை காரணமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்கனவே மருத்துவ அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் அரசாங்கமும் சுகாதார அவசர நிலையை பிரகடனப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிர் வாழும் உரிமை, சுகாதார சேவையை தடையின்றிப் பெறும் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவ தற்கு தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த சில நாட்களுக்கு முன் தெரிவித்திருந்தது.

நாட்டில் அத்தியாவசிய மருந்துகள், உபகரணங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்கான பொருட்கள் இல்லாத நிலையில் அத்தியாவசிய சுகாதார சேவைகளை தொடர்ந்து வழங்கு சாத்தியமற்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் மருத்துவர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கிடையே தற்போதைய நெருக்கடியின் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் 40 விதமான மருந்துகளின் பற்றாக்குறை காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 60 விதமான மருந்துகளின் கையிருப்பு இன்னும் ஒரு வாரத்துக்கு தேவையான அளவிலேயே உள்ளதாகவும் மருத்துவத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

கிளினிக் நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் மற்றும் இதய நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளுக்கு கடும் பற்றாக்குறை உள்ளது. அதே நேரத்தில் மருத்துவ உபகரணங்களும் பற்றாக்குறையாக உள்ளன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளிலிருந்து இலங்கை மருந்துப் பொருட்களை அதிகம் இறக்குமதி செய்கிறது.

இந்நிலையில் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, மருந்துப் பொருட்களின் இறக்குமதி தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுஜன பெரமுன கட்சியின் ஒருங்கிணைப்பாளராக நாமல்!

கொழும்பு, ஏப். 11

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை முன்னெடுத்து செல்லும் பொறுப்பை ஏற்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதன் முதற் கட்டமாக நாமல் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படவுள்ளார்.

இதன் பின்னர் பொதுஜன பெரமுனவின ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ இதுவரை செய்து வந்த கட்சியின் விரிவாக்கல் பணிகளை நாமல் ராஜபக்ஷ மேற்கொள்வார் எனக் கூறப்படுகிறது.

நாட்டின் தற்போது பொருளாதார நெருக்கடியில் பொதுஜன பெரமுனவின் அரசியல் செயல்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன. இதன் காரணமாக அந்தக் கட்சியை மறுசீரமைக்கும் அடிப்படை பொறுப்பு நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# அதிக விலைக்கு காஸ் விற்றால் பொலிஸில் முறைப்பாடு செய்க!

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 11

அதிக விலைக்கு லிட்ரோ சமையல் எரிவாயுவை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனத்தினால் இதுவரையில் எரிவாயு விலை அதிகரிக்கப்படாத நிலையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு அதிகமாக விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடளிக்குமாறு அந்த நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார்.

அத்துடன் அவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் லிட்ரோ நிறுவனத்தின் 1311 என்ற இலக்கத்தை அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 3,900 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று மாலைதீவில் இருந்து நாட்டை வந்தடைந்தது.

அதிலுள்ள எரிவாயுவை தரையிறக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு லிட்ரோ நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

லிட்ரோ நிறுவனத்தினால் நாளாந்தம் சுமார் 110,000 எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

எனினும் நாட்டின் பல பகுதிகளில் எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்பாக மக்கள் வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. (அ)

நாட்டில் தொடரும் பரிதாபம்

# எரிபொருள் பெறுவதற்கு வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்தவர் மரணம்!

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலை உச்சமடைந்து வரும் நிலையில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் போது உயிரிழக்கும் துயரச் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.

அந்த வகையில் நேற்றும் எரிபொருளுக்காக நீண்டநேரம் காத்திருந்த நபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

தங்கொட்டுவ பகுதியில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் உடல் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



> ஏழைகளுக்கான நல்வாழ்வுத் திட்டச் செலவுகள் என்றால் அதற்கான நிதியை ஏழைகளிடமே வசூலித்ததுதான் இந்த அரசின் சாமர்த்தியம். அதேவேளையில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையும் அவர்களுடைய வருமானமும் சொத்து மதிப்பும் கணக்கில் அடங்காமல் பல மடங்காகப் பெருகிக் கொண்டிருக்கிறது!

# நாய் வாலை வெட்டி 'நாய்க்கு' சூப் தயாரிக்கும் இந்திய அரசு

**- ப.சிதம்பரம்**

வரிகள், நல்வாழ்வு, தேர்தல் வெற்றி ஆகிய மூன்றையும் ஒரே புள்ளியில் இணைக்க வழி கண்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் சூழ்ச்சித் திறனை நாம் பாராட்டியே தீர வேண்டும். தேர்தல் நிதி நன்கொடைப் பத்திரம், சலுகைசார் முதலாளித் துவம், ஊழல் ஆகிய மூன்றையும் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதற்கான புதிய முறை என்கிற திட்டத்தின் மூலம் இணைத்து, இதில் எந்தச் சட்ட விரோதமும் இல்லை எனும் மாயை உருவாக்கியதைப் போலவேதான் முன்னதிலும் செய்திருக்கிறது.

முதல் மூன்று அம்சங்களுக்கு மீண்டும் வரு வோம். வரிகள், நல்வாழ்வு, வாக்குகள் பற்றியது அது.

2019 மக்களவை பொதுத் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள், பொருளாதார அடித்தளக் கட்டமைப்பில் மாறுதல்கள், ஜிடிபி வளர்ச்சிக்குத் தனியார் முதலீட்டை அதிகம் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், வேலைவாய்ப்பைப் புதிதாக லட்சக்கணக்கில் உருவாக்கும் செயல்கள், ஏழ்மையை ஒழிப்பதற்கான முயற்சிகள் ஆகிய அனைத்தையும் கிட்டத்தட்ட கைவிட்டுவிட்டது மோடி அரசு. வலுவான பொருளாதார நிர்வாகம் மூலம்தான் அவற்றையெல்லாம் மேற்கொள்ள முடியும் அதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். தேர்தலில் மக்களுடைய வாக்குகளைக் கவர எளிதான மாற்று வழியொன்றை மோடி அரசு கண்டுபிடித்து விட்டது. அதுதான் புதிய நல்வாழ்வு திட்டங்கள்!

'கோவிட்-19' பெருந்தொற்று என்கிற நோய் வந்ததால், அரசு தன்னுடைய புதிய நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் முடிந்தது (அரசின் நல்வாழ்வு நடவடிக்கைகள் பரம ஏழைகள், புலம்பெயர்ந்து சென்ற பாட்டாளிகள், தொற்றுநோய்க்குப் பிறகு அரசு அறிவித்த பொது முடக்கத்தால் வேலை யிழந்தவர்கள், கட்டாயப்படுத்தி மூட வைக்கப்பட்ட குறு - சிறு - நடுத்தரத் தொழில் பிரிவைச் சேர்ந்த வர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், முதியவர்கள் ஆகியோரை எட்டவே இல்லை என்பது தனிக் கதை- அதுவே அரசின் தோல்வியாகவும் பார்க்கப்படுகிறது).

## நியாயமற்ற வரிக் கொள்கை

விரிவான நல்வாழ்வு நடவடிக்கைகள் மூலம் கிடைக்கக்கூடிய அரசியல் - தேர்தல் ஆதாயங்களைக் கணக்கிட்டு, மோடி அரசு அதில் கவனம் செலுத்தத் தொடங்கியது. அப்போது ஒரு கேள்வி எழுந்தது, 'இந்த நல்வாழ்வு திட்டங்களுக்கான நிதியை யாரிடமிருந்து பெறுவது?'

புதிய நல்வாழ்வு நடவடிக்கைகளால் பயனடையப் போகும் ஏழைகளிடமிருந்தே அதற்கான பணத்தை வரியாகப் பெற்றுவிடலாம், இதை அவர்கள்தான் செலுத்த வேண்டும் என்று சிந்தித்ததும் அதைச் செயல்படுத்தியதும்தான் இந்த அரசின் 'அறிவுக் கூர்மை'யுள்ள செயல்!

சமத்துவமும் நீதியும் நிலவும் சமூகமாக இருந்தால், பெரும் பணக்காரர்களும், பெரிய தொழில் நிறுவனங்களும்தான் அதிக வரிகளைச் செலுத்த வேண்டும் - அந்தத் தொகையிலிருந்து ஏழை களுக்கான நல்வாழ்வு நடவடிக்கைகளுக்குச் செலவுசெய்ய வேண்டும் என்பதே நியதியாக இருக் கும்.

மோடி அரசு இதற்கு நேர் எதிரான நடவடிக்கைகளையே மேற்கொண்டது: பெரு நிறுவனங்கள் மீதான கார்ப்பரேட் வரி விகிதத்தை 22மூ - 25% ஆகக் குறைத்தது. புதிய முதலீடுகள் மீது - மிகவும் தாராள மனதுடன் - அதிகபட்சம் 15% தான் வரி என அறிவித்தது. தனி நபர்கள் செலுத்த வேண்டிய அதிகபட்ச வருமான வரியே 30%தான் எனக் குறைத்தது. அந்த வருமான வரி மீது கல்வி சுகாதாரத்துக்கான மேல் வரியையும் அந்தத் தொகையில் 4% என்றே மிதமாக விதித்தது. செல்வ வரி ரத்து செய்யப்பட்டுவிட்டது. சொத்துகளை பிதுரார்ஜிதமாகப் பெறுவதன் மீது வரி விதிப்பது குறித்து அரசு சிந்திக்காமலேயே இருக்கிறது

இப்போது அரசுக்கு வருவாயை அள்ளித் தரும் இரண்டு பெரிய இனங்கள் 'சரக்கு-சேவை வரி' (ஜிஎஸ்டி) மற்றும் பெட்ரோல்-டீசல்-சமையல் எரிவாயு உள்ளிட்ட எரி பொருள்கள் மீதான வரி ஆகியவையே. எரி பொருள்கள் மீதான மத்திய அரசின் உற்பத்தி வரியை, தங்கச் சுரங்கத்துக்கே ஒப்பிடலாம். இங்கே சுரங்கத்தைத் தோண்டும் வேலைகூட அரசுக்கு இல்லை மக்களே தங்கள் வருமானத் திலிருந்து எரிபொருள்களுக்கான வரியை அன்றாடம் கோடிக்கணக்கில் நிமிடத்துக்கு நிமிடம் கொண்டுவந்து அரசின் காலடியிலேயே கொட்டிவிட்டுப் போகிறார்கள்!

## பகல் கொள்ளையாக வரிவிதிப்பு

மோடி அரசு பதவியேற்ற 2014 மே மாதம் நாட்டில் நிலவிய உற்பத்தி வரி விகிதத்தை, இன்றைக்கு நிலவும் வரி விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது புரியும்.

இந்தத் தொகையில் பெரும் பகுதியை டீசல் பம்புசெட்டுகள் - டிராக்டர்கள் வைத்திருக்கும் விவசாயிகளும், இரண்டு சக்கர - நான்கு சக்கர மோட்டார் வாகன உரிமையாளர்களும், ஆட்டோ - டாக்ஸி டிரைவர்களும், அன்றாடம் வேலைக்குச் செல்வோரும், இல்லத்தரசிகளும்தான் வழங்கியுள்ளனர்.

2020-21இல் கோடிக்கணக்கான நுகர்வோர் மத்திய அரசுக்கு எரிபொருள் உற்பத்தி வரியாக ரூ.4,55,069 கோடியை அளித்தபோது (மாநில அரசுகளுக்கு விற்பனை வரியாகத் தரப்பட்டது ரூ.2,17,650 கோடி), இந்தியாவின் 142 பெருங் கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு ரூ.23,14,000 கோடியிலிருந்து ரூ.53,16,000 கோடியாக உயர்ந்தது. கிட்டத்தட்ட ரூ.30,00,000 கோடி உயர்வு!

ஏழைகளையும் நடுத்தர மக்களையும் இப்படி எரிபொருள் வரியாக விதித்து கசக்கிப் பிழிந்து பெரும் தொகையைப் பெற்ற பிறகு அந்தத் தொகையிலிருந்தே மக்களுக்குக் கூடுதல் நல்வாழ்வு திட்டங்களை அமல்படுத்த செலவிட்டது!

2020இல் கூடுதல் நேரடி உதவியாக வழங்கப் பட்டது என்பதை இனவாரியாக நாம் கணக்கிடலாம். விலையில்லா உணவு தானியங்களுக்காக வழங்கப் பட்டது இரண்டு ஆண்டுகளில் ரூ.2,68,349 கோடி, மகளிருக்கு ஒரே தவணைத் தொகையாக அளித்தது ரூ.30,000 கோடி, ஆண்டுக்கு விவசாயிகளுக்கு ரூ.6,000 என்ற வீதத்தில் ஆண்டுக்கு அளித்தது ரூ.50,000 கோடி. இவை போக றபப்ட்டுள்ளது.

வேறு சில நேரடி ரொக்க உதவித் திட்டங்களும் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றையெல் லாம் கூட்டினால் ஆண்டுக்கு ரூ.2,25,000 கோடிக்கு அதிகமில்லை. மத்திய அரசு மட்டுமே வசூலித்த எரிபொருள் வரி வருவாயைவிட இது மிகவும் குறைவு.

அதனால்தான் சொல்கிறேன், ஏழைகளுக்கான நல்வாழ்வுத் திட்டச் செலவுகள் என்றால் அதற்கான நிதியை ஏழைகளிடமே வசூலித்ததுதான் இந்த அரசின் சாமர்த்தியம். அதேவேளையில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையும் அவர்களுடைய வருமானமும் சொத்து மதிப்பும் கணக்கில் அடங்காமல் பல மடங்காகப் பெருகிக் கொண்டிருக்கிறது!

**(கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள ரூபா- இந்திய ரூபா என்பதை வாசகர்கள் கவனிக்கவும்)**

# ஜனநாயக காட்சிகள் ஊடாக பலமாகும் எதேச்சாதிகார ஆட்சி!

பனங்காட்டான்

**மக்கள் தன்னெழுச்சியை அடக்கி முறிக்க ஆட்சி பீடம் தன்னைத் தயாராக்கி வருகிறது. இரத்த ஆறு ஓடும் காலம் வருமென்ற அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோவின் எச்சரிக்கை பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னைய நிகழ்வை மனக்கண்முன் கொண்டு வருகிறது. மொட்டு விரியாமலே கருகினாலும் பரவாயில்லை, தாம் பதவி விலகப் போவதில்லையென்ற கோட்டாபயவின் முடிவு, ராணுவ பலத்துடன் சகல அதிகாரங்களையும் பிரயோகிக்க அவர் தயாராகிறார் என்பதை தெளிவாக்குகிறது.**

இலங்கையின் ஏழு தசாப்தத்துக்கும் மேலான அரசாட்சி வரலாற்றில் இன்று போன்ற மக்கள் தன்னெழுச்சி அல்லது அடிமட்ட அரசியல் கொந்தளிப்பு இதற்கு முன்னர் இடம்பெற்றதில்லை.

இலங்கை எங்கள் நாடு - எங்களுக்கான நாடு - நாங்கள் ஆட்சி புரியும் நாடு - எங்களின் அரசாங்கம் என்ற ஏகபோக அரசியல் வழியில் தங்களால் அரியா சனம் ஏற்றப்பட்ட தலைவருக்கு எதிராக, அவரைத் தெரிவு செய்த அதே மக்களே அவருக்கு எதிராக வீதிகளில் நின்று தொடர்ந்து போராடுவது இதுவே முதன்முறை.

இப்படிக் கூறுவதால் சிங்கள அரசாங்கங்களுக்கு எதிராக இதற்கு முன்னர் எதிர்ப்பலை ஏற்படவில்லை என்று அர்த்தமில்லை.

1953ல் அரிசியின் விலையை 25 சதத்தால் கூட்டியதால் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தை சந்திக்க முடியாத நிலையில், அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க தமக்கு வயிற்றுக்குத்து என்று காரணம் கூறி பதவியைத் துறந்துவிட்டு இங்கிலாந்து ஓடினார்.

1959ம் ஆண்டில் இலங்கையின் முதலாவது அரசியல் கொலை கொழும்பில்தான் இடம்பெற்றது. பஞ்சவேகய என்ற ஐந்தரப்பின் பங்களிப்பில் ஆட்சி பீடமேறிய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் கொலைச்சம்பவம் அது. இந்தக் கொலையை புரிந்து மரணதண்டனை பெற்றவர் பௌத்த பிக்குவான சோமராம தேரர்.

1971 ஏப்ரல் 5ம் திகதி அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவை கொலை செய்து, அல்லது உயிருடன் பிடித்து ஆட்சியை கவிழ்க்க ரோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. ஆயுதக்குழு முயற்சித்தது. இந்தியாவின் துணையுடன் அதனை முறியடித்தார் சிறிமாவோ பண்டாரநாயக்க.

இவைகளோடு ஒப்புநோக்கையில் தற்போதைய மக்கள் தன்னெழுச்சி முற்றிலும் வித்தியாசமானது. ஒரு குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்ற முழக்கத்துடன் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நாடு தழுவியதாக, இன மத வர்க்க வேறுபாடின்றி இப்போராட்டம் தொடருகிறது.

மார்ச் மாதம் 31ம் திகதி கோட்டாபயவின் தனிப்பட்ட இல்லமான மிரிகான பங்கிரிவத்தையில் - கோட்டா ஹோ ஹோம் (கோட்டாபய வீட்டுக்குப் போ) என்ற கோஷத்துடன் ஆரம்பித்த போராட்டம் இன்று புற்றுநோய் போன்று வியாபித்து, பிரதமர் பதவி வகிக்கும் மகிந்தவையும் பதவி விலகுமாறு கோரி அலரி மாளிகை முன்னாலும் அம்பாந்தோட்டை இல்லத்தின் முன்னாலும் நடைபெறுகிறது.

அரசசார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவர்களின் அடிவருடிகள் (உதாரணம் - சோதிடர் ஞானக்கா) மற்றும் முக்கிய அதிகாரிகள் இல்லங்களைத் தேடித்தேடி இரவு பகலாக மக்கள் எழுச்சி கொண்டு போராடுகிறார்கள். இதிலுள்ள சிறப்பம்சம் - அரசியல்வாதிகள் எவரையும் பார்வையாளர்களாகக் கூட மக்கள் அனுமதிக்கவில்லை. பொத்துவில் முதல் பொலிகண்டிவரை தாயகத் தமிழர்களால் நடத்தப்பட்ட பேரணியில் தமிழ் அரசியல்வாதிகள் ஒதுக்கப்பட்டது போலவே இதுவும் காணப்படுகிறது.

ராஜபக்ச குடும்பத்தின் நான்கு சகோதரர்கள் - ஜனாதிபதி, பிரதமர், இரண்டு அமைச்சர்கள், இக்குடும்பங்களின் இரண்டு புதல்வர்கள் அமைச்சர்கள், இது தவிர நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய நிறுவனங்களின் தலைவர்கள், தூதுவர்கள் என்று ஒரு பட்டாளம் ஆட்சி நடத்தும் அல்லோகல்லோலம் பகிரங்கமாகியுள்ளது.

ஆனாலும், எதற்குமே மசியாதவராகவும், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்காதவராகவும் காணப்படும் கோட்டாபய, அவர்களை ஏமாற்றும் தந்திரோபாயங்களை கையாண்டு வருகிறார். அவற்றுள் சிலவற்றை பின்வரும் காட்சிகளாக நோக்கலாம்:

தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டாமல், மக்கள் குரலுக்கு மதிப்பளிப்பது போன்று அமைச்சர்களை அப்பதவிகளிலிருந்து ராஜினாமா செய்ய உத்தரவிட்டார். ராஜினாமாக் கடிதங்கள் பிரதமரிடமே ஒப்படைக்கப்பட்டன. அவை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு அவர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே செல்லுபடியாகும். ஆனால் இதுவரை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படாமல் பிரதமர் வசமே அவை உள்ளன. அதனால் அமைச்சர்கள் பதவி விலகியதாக சட்டபூர்வமாக சொல்ல முடியாது.

நிலைமை இப்படியிருக்கையில், நான்கு அமைச்சர்களை மீளவும் கோட்டாபய நியமனம் செய்தார். இவர்களில் ஒருவராக பசில் ராஜபக்சவின் நிதி



அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்றி, பதவியேற்ற அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் ராஜினாமா செய்துவிட்டார். சிலவேளை பசில் ராஜபக்சவே மீண்டும் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம்.

அடுத்ததாக, காபந்து (இடைக்கால) அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாக அதிரடியாக அறிவித்த கோட்டாபய, அதில் தாம் பதவி நீக்கம் செய்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் உட்பட எதிர்கட்சியினரையும் இணையுமாறு அழைப்பு விடுத்தார். வீட்டுக்குப் போ என்று மக்களால் வேண்டப்படும் கோட்டாபய அதற்குச் செவி சாய்க்காமல் தமது தலைமையிலேயே காபந்து அரசை ஏற்படுத்த முனைந்த நாடகம் பிசுபிசுத்துப் போனது.



அடுத்து வந்த அறிவிப்பு நம்ப முடியாத விசித்திரமானது. நாடாளுமன்றத்தில் 113 உறுப்பினர்களை தங்கள் பக்கம் கொண்ட எவராவது நிரூபித்தால் அவர்களிடம் (தமது தலைமையில்) ஆட்சிப் பொறுப்பை வழங்கத் தயார் என்பது. எதிரணிகள் தமக்குள் பிளவுபட்டிருப்பதால் இது சாத்தியமாகாது என தெரிந்து கொண்டு விடுக்கப் பட்ட அறிவிப்பே இது. இதனூடாக தமது பதவியை தொடர்ந்து வைத்திருக்க கோட்டாபய மேற்கொண்ட யுக்தி தோல்வி கண்டது.

இதன் பின்னர் அடுத்த கட்ட அறிவிப்பு வந்தது. மக்கள் கோரிக்கைக்கு ஏற்றவாறு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தாம் விடுத்த வேண்டுகோளை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொள்ளாததால், தாம் முன்னைய நிலைக்குச் செல்லவிருப்பதாக அறிவித்தார். அதாவது, தமது கட்சி சார்ந்த, தம்மை ஆதரிப்பவர்களைக் கொண்ட அமைச்சரவையை மீண்டும் நியமிக்கப் போவதான அறிவித்தல் இது.

இதனை எழுதும்வரை புதிய அமைச்சரவை நியமிக்கப்படவில்லை. முன்னரிலும் பார்க்க சிறிய அளவான ஓர் அமைச்சரவையை மகிந்த தலைமையில் நியமிக்கவிருப்பதாக அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வேதாளம் மீண்டும் அதே மரத்தில் ஏறும் கதை இது.

அதேசமயத்தில், கோட்டாபய எந்தவேளையிலும் ஜனாதிபதி பதவியை துறக்க மாட்டாரென்று அறுதியாகவும் உறுதியாகவும் கூறியுள்ளார் அரசாங்கத் தரப்பு கொறடாவான அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ.

இதற்கு அனுசரணையாக இரண்டு அறிவிப்புகள் முக்கியமான தளங்களிலிருந்து வந்துள்ளது. கொழும்பிலுள்ள ராஜதந்திரிகளைச் சந்தித்து நிகழ்கால நிலைமையை விளக்கிக் கூறிய ராணுவத் தளபதி சவேந்திர சில்வா, நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்டதாக ராணுவம் எப்போதும் நடந்துகொள்ளும் எனத் தெரிவித்துள்ளார். முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளையும் இவ்வாறுதான் ராணுவத்தரப்பு கூறியது ஞாபகம் இருக்கிறது.

பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன முக்கிய அறிக்கையொன்றை பகிரங்கமாக வெளியிட்டுள்ளார். அமைதியான முறையில் போராட்டத்தை நடத்த மக்களுக்கு உரிமையுண்டு என்று கூறியுள்ள இவர், வன்செயலாக மாறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென கோடு காட்டியுள்ளார்.

இந்த அறிவிப்பு வந்த அதே நாளன்று, ஜெயவர்த்தனபுர நாடாளுமன்ற வளவில் மக்கள் பேரெழுச்சி இடம்பெற்றது. அவ்வேளை இலக்கத் தகடற்ற நான்கு மோட்டார் சைக்கிள்களில் ராணுவச் சீருடையில் துப்பாக்கிகள் சகிதம் வந்தவர்களை பொலிசார் மறித்து விசாரித்துவிட்டு திருப்பியனுப் பினர். இதனைக் கண்டித்துள்ள ராணுவத் தளபதி சம்பந்தப்பட்ட பொலிசார் மீது உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸ் மாஅதிபரிடம் கேட்டுள்ளார்.

எல்லாமே அரசமைப்புக்குட்பட்டுதான் செயற்படுகிறது என்றால், இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் ராணுவம் ஆயுதபாணிகளாக செல்ல வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? இனவழிப்பினை முன்னின்று வழிநடத்திய கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் ராணுவ உயரதிகாரிகளாக கடமையாற்றிய சவேந்திர சில்வாவும் கமால் குணரட்னவும், தங்கள் எஜமானின் கதிரையை காப்பாற்ற முனையும் செயற்பாடுகளாக அவர்களின் முரண்பட்ட கூற்றும், செயற்பாடும் காணப்படுகிறது.

ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள் என்றால் அவரை எவரும் அசைக்க முடியாதென ஆட்சித்தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் அவர் விரும்பினால் எந்த வேளையிலும் பதவி விலகலாமென தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கோட்டாபயவை ஜனாதிபதி கதிரையில் அமர்த்திய அறுபத்தொன்பது லட்சம் மக்கள்தான் அவரை வீட்டுக்குப் போகுமாறு கேட்கின்றனர். இதற்கு ஆதரவாக இவரது ஆட்சியை ஆதரித்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க ஆரம்பித்துள்ளனர். ஆனாலும், ஜனநாயக மரபை பின் பற்ற கோட்டாபய தயாராக இல்லை.

தமது பதவியை தாம் ஒருபோதும் துறக்கப்போவ தில்லையென தமக்கு நெருக்கமானவர்களிடம் மட்டு மன்றி ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணிலிடமும் அவர் தெரிவித்திருக்கிறார். இதற்குப் பின்னரும் தமக்கு ஐந்தாண்டு ஆணையை மக்கள் அளித்ததாக அவர் கூறுவது சர்வாதிகாரப் போக்கிலானது.

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்து மூன்றாண்டு கள் முடிவதற்கு முன்னரே அந்த மொட்டு (சின்னம்) கருக ஆரம்பித்துள்ளது. மக்கள் கொந்தளிப்பு மேலோங்குகிறது. நாட்டில் பெரும் பட்டினி ஏற்படப்போவதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். ஆனால், கோட்டாபயவை பொறுத்தளவில் தமக்குப் பக்கபலமாக ராணுவம் இருப்பதாகக் கருதுகிறார்.


கோட்டாபயவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ எச்சரித்துள்ளது போன்று, நாட்டில் இரத்த ஆறு ஓடும் காலம் வருமா? பிலிப்பைன்சிலும், எகிப்திலும், துனிசியாவிலும் மக்கள் புரட்சி எந்த மாறுதலை ஏற்படுத்தியது என்பதை ராஜபக்ச குடும்பம் ஒரு தடவை எண்ணிப்பார்க்க வேண்டும்.


காலம் மாறும், காட்சிகள் மாறும் என்பர். இலங்கையைப் பொறுத்தளவில் ஜனநாயக காட்சிகள் ஊடாக எதேச்சாதிகார ஆட்சி பலமடையலாம் என்பதே பரவலாகத் தெரியும் காட்சி!

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1)
2)
3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 * 4 ⊞ 3 = 15 இங்கு * ⊞ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

# விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

கல்வி tv CHANNEL-1

**11.04.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**11.04.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# கண்தானம் செய்வதவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப். 11

சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் கண்தானம் செய்வதவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களுக்கு உதவி வறியவர்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி, வேலூரில் உள்ள சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையத்தினால் உளவியல் சார் கற்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் சமூக செயற்பாட்டு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்கீழ் கண்தானம் செய்வதற்காக தங்களை இலங்கை கண்தானச் சங்கத்தில் பதிவு செய்துகொண்டவர்களுக்கான பதிவுச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சர்வதேச உளவியல்சார் கற்கைகள் நிலையத்தின் தலைவர் திருமதி தேவரஞ்சினி பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களான செல்வி த.கௌரி, சிவலிங்கம், சுபராஜ்,கிராம சேவையாளர் செ.பாக்கிய நேசன், பொலிஸ் உத்தியோகத்தர் திருமதி இலிமலேஸ்வரி ஆறுமுகம் ,இலங்கை கண்தான சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சோ. திருமாறன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை கண்தானச் சங்கத்தில் கண்தானம் செய்வதற்காக தங்களை பதிவு செய்துகொண்டுள்ள 30பேருக்கான பதிவு சான்றிதழ் இதன்போது வழங்கப்பட்டன.

அத்துடன் மிகவும் வறிய நிலையில் உள்ள நான்கு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக தொடர்ந்து நிதியுதவியை வழங்கும் வகையில் வங்கிக் கணக்குப் புத்தகங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இதேபோன்று வறிய நிலையில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்களும், வாகரை பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மாணவி ஒருவருக்கு பாடசாலைக்கு செல்வதற்காக சைக்கிளும் வழங்கப்பட்டன. (அ)

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

மட்டக்களப்பு, ஏப். 11

மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினரொருவர் ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் மற்றும் ஒரு உறுப்பினர், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் ஒரு உறுப்பினர் உட்பட பதவி வெற்றிடமான நால்வரின் இடத்துக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் எம்.பி. எம்.சுப்யான் தெரிவித்தார்.

புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் கடந்த சனிக்கிழமை ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். சுபைர் தலைமையில் இடம் பெற்றது.

புதிய உறுப்பினர்கள் நால்வரினதும் பெயர்கள் 2022ஆம் ஆண்டு ஏப்ரில் 06ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் உறுப்பினராகவும் அச்சபையின் பிரதித் தவிசாளராகவும் செயற்பட்ட மீராலெப்பே றெபுபாசத்தின் உறுப்பினர் பதவிக்குப் பதிலாக மீராஸாஹிபு அப்துல் கபூர் மற்றும் உறுப்பினரான அலியார் பாத்திமா பஜிகாவுக்குப் பதிலாக அப்துல் மஜீத் சப்ரா ஆகியோரும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் ஐயங்கேணி முஸ்லிம் வட்டார உறுப்பினரான எம். எஸ். முஹம்மது ஜவ்பர் என்பவரின் வெற்றிடத்துக்கு அலியார் றஹ்மா பீபீ ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



மேற்படி பழைய உறுப்பினர்கள் மூவரையும் கட்சி உறுப்புரிமையில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நீக்கியதால் அவர்கள் உள்ளூராட்சிமன்றங்களில் வகித்த உறுப்பினர் பதவியை இழந்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாநகர சபையின் 16ஆம் இலக்க மஞ்சந்தொடுவாய் வட்டார உறுப்பினர் முஹம்மட் உசனார் முஹம்மட் நிப்லார் என்பவர் அனுமதி பெறாது தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத காரணத்தினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு அப்துல் காதர் முஹம்மட் லத்தீப் நியமிக்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சுப்யான் அறிவித்துள்ளார்.

புதிய உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண பதவியேற்பு வைபவத்தில் ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நளீம், செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் உட்பட அலுவலர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (அ)

# தேசிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டியோரின் விவரம் திரட்டல்

மட்டக்களப்பு, ஏப். 11

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சர்வதேச மட்டங்களில் பங்குபற்றிய மற்றும் தேசிய விளை யாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய விளை யாட்டு வீர, வீராங்கனைகளின் தரவுகளை ஆவணப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் மட்டக் களப்பு மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக மேற்படி விளை யாட்டு வீர, வீராங்கனைகளின் விவரங்கள் கீழ் வரும் பிரிவுகளின் அடிப்படையில் ஆவணப் படுத்தும் நோக்கில் கோரப்படுகின்றனது.

1. 1990ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச மட்டத்தில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் பங்கு பற்றிய போட்டிகள் அல்லது இலங்கை தேசிய அணி சார்பாக பங்குபற்றிய (தனிஅல்லது குழு) விளை யாட்டு நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக பங்குபற்றியவர்கள் மற்றும் வெற்றி யீட்டியவர்கள்.

2. 1990ஆம் ஆண்டிலிருந்து இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப் பட்ட தேசிய விளையாட்டு விழாவில் முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களை பெற்றுக்கொண்டவர்கள்.

மேற்படி விண்ணப்பங்களை ஏ-4 தாளில் தயாரித்து உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களது பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்திலோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட் டுப் பிரிவிலோ தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 25.04.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிவாயுவை வழங்குமாறு கோரி மக்கள் வீதியில் ஆர்ப்பாட்டம்!

திருமலை, ஏப். 11

எரிவாயுவை வழங்குமாறு கோரி, திருகோணமலை அஞ்சல் அலுவலகத்துக்கு முன்னால், பிரதான வீதியை இடைமறித்து சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நேற்று முன் தினம் காலை 6 மணிமுதல் எரிவாயு வழங்கப்படும் என எரிவாயு விற்பனை நிலைய உரிமையாளர் கூறியதை அடுத்து, பொதுமக்கள் நீண்ட வரிசையில் எரிவாயுவுக்காக காத்திருந்தனர்.

எனினும், மாலை நேரம் வரையில் எரிவாயு கிடைக்காமையால், தங்களுக்கு எரிவாயு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி, கொள்கலன்களை வீதியின் குறுக்காக வைத்து, மழைக்கு மத்தியிலும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# அரசுக்கு எதிராக திருமலையில் சனி இரவு தீப்பந்த போராட்டம்!

திருமலை, ஏப். 11

கொழும்பில் முன்னெடுக்கப்படும் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் திருகோணமலை 4ஆம் கட்டை சந்தியில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



வீதி ஓரத்தில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு ஒன்று கூடிய பொது மக்கள் கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் எழுச்சிக்கு அங்கு சென்று ஆதரவளிக்க முடியாத நிலையில் இருக்கும் தாம் 4ஆம் கட்டைச் சந்தியில் ஒன்றிணைந்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாக அவர்கள் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு



# இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ந்தது!

## பாகிஸ்தானில் பெரும் பரபரப்பு

இஸ்லாமாபாத், ஏப். 11

**பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் நேற்று அதிகாலை நிறைவேறியது.**

**இதையடுத்து பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசு கவிழ்ந்தது.**



நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

342 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றில் 174 உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் மூலம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றது.

இந்நிலையில் எதிர்கட்சிகள் தங்களது பெரும்பான்மையை நிரூபித்துள்ளமையை அடுத்து புதிய பிரதமரை பாராளுமன்றம் நியமிக்க உள்ளது.

பாகிஸ்தானின் புதிய பிரதமரை தேர்வு செய்வதற்காக பாராளுமன்றம் இன்று திங்கட்கிழமை கூடுகிறது.

புதியதாகத் தெரிவு செய்யப்படும் பிரதமர் அடுத்த தேர்தல் நடைபெறவுள்ள ஒக்ரோபர் 2023 வரை ஆட்சியில் இருக்க முடியும்.

இதேவேளை, நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பு மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்ட முதல் பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பெயர் இடம்பெற்றுள்ளது.

வாக்கெடுப்பு தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு இம்ரான் கான் கூட்டாளியான பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் கீழ் சபையின் சபாநாயகர் தனது ராஜினாமாவை அறிவித்தார்.

அத்துடன், இம்ரான் கானின் பி.ரி.ஐ கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றக் கட்டடத்தை விட்டு வெளியேறினர். வெளியேறுவதற்கு முன்னர் இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் ஒரு சர்வதேச சதித்திட்டம் என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனாக இம்ரான் கான் 2018 இல் நடந்த தேர்தலில் வென்று பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியேற்ற அவர், ஊழலுக்கு எதிராக போராடி, சரிந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்வதாக உறுதியளித்தார்.

ஆனால் பாகிஸ்தான் தற்போது கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனால் இம்ரான் கான் தனது உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியவில்லை.

மார்ச் மாதத்தின் பிற்பகுதியில் இருந்து அவருக்கு ஆதரவளித்த கூட்டணிக் கட்சிகள் கூட்டணியில் இருந்து தொடர்ச்சியாக விலகியதால் அவரது அரசு பெரும்பான்மையை இழந்தது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லா தீர்மானத்தை தவிர்க்க பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை எதிர்கொள்ள இம்ரான் கான் முன்னெடுத்த திட்டமும் பயனளிக்கவில்லை.

இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது கடந்த 3 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில் துணை சபாநாயகர் காசிம் சூரி நம்பிக்கை வாக்கெடுப்பை நிராகரித்தார். அதையடுத்து இம்ரான்கான் பரிந்துரையை ஏற்று பாராளுமன்றத்தை கலைத்து ஜனாதிபதி ஆரிப் ஆல்வி உத்தரவிட்டார்.

இந்த நடவடிக்கை அங்கு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து இந்த விவகாரத்தை பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உமர் அட்டா பாண்டியல் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு தானாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை நடத்தியது.

இந்த விசாரணை முடிவில் பாகிஸ்தான் பாராளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதி ஆரிப் ஆல்வியின் நடவடிக்கை சட்ட விரோதமானது எனவும், அது செல்லாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் பாராளுமன்றத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை கூட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடுமாறு சபாநாயகர் ஆசாத் காசியருக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், அன்றே இம்ரான் கான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்சன் கீவ் நகருக்குத் திடீர் விஜயம்!

## உக்ரைனுக்கு 120 கவச வாகனங்கள் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் உதவி

கீவ், ஏப். 11

பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் சனிக்கிழமை உக்ரைன் தலைநகர் கீவுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அதன்போது உக்ரைன் படைகளுக்கு120 இராணுவக் கவச வாகனங் களையும் புதிய கப்பல் எதிர்ப்பு ஏவுகணைத் தொகு தியையும் வழங்கினார் என்று "நம்பர் 10" பிரதமர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

மேலும் 100 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான இராணுவ உதவிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி 24 இல் ரஷ்யா போரைத்தொடக்கிய பிறகு கீவ் நகருக்குச் சென்று அதிபர் ஷெலன்ஸ்கியை நேரில் சந்திக் கின்ற வல்லரசுத் தலைவர் ஜோன்சன் என்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் கீவ் நகர வீதிகளில் நடந்து பார்வையிடும் படங்களைச் செய்தி ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. அங்கு வைத்து அதிபர் ஷெலன்ஸ்கியை "சிங்கம்" என்று புகழ்ந்தார் ஜோன்சன்.

"உக்ரேன் கணிப்புகளை மீறி, ரஷ்யப் படைகளைக் கீவ் நகரின் வாயில்களில் இருந்து பின்னுக்குத் தள்ளி, 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சாதனையை அடைந்துள்ளது. இந்தப் போரில் இங்கிலாந்து அவர்களுடன் உறுதியாக நிற்கிறது என்பதை நான் இன்று தெளிவுபடுத்தியுள்ளேன். நாங்கள் நீண்ட காலத்திற்கு இவ்வாறு ஐக்கியமாய் இருப்போம்," என்று அவர் மேலும் கூறினார்.

உக்ரைனுக்கு மேற்கு நாடுகள் கவச வாகனங்களை ஏற்கனவே விநியோகித்துள்ளன. ஆனால் பிரிட்டன் அதன் நவீன ஹார்பூன் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதியை வழங்குகிறது. ரஷ்யாவுக்கு எதிரான போரில் நேட்டோ நாடு ஒன்று இதுபோன்ற ஆயுத தளபாட உதவியை வழங்குவது இதுவே முதல் முறை ஆகும்.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் போரில் தப்பி வெளியேறிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களால் நிறைந்திருந்த ரயில் நிலையம் ஒன்றை ரஷ்யப்படைகளின் ஏவுகணைகள் தாக்கியதில் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்த சம்பவத்துக்குப் பின்னரே பிரிட்டனின் இந்தப் புதிய இராணுவ உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வோன் டெர் லேயன் வெள்ளிக்கிழமை கீவ் நகருக்குச் சென்றிருந்தார். (அ)

# இஸ்ரேலில் அதிகரித்துவரும் தாக்குதல்கள்: பாதுகாப்பு படைகளுக்கு சிறப்பு அதிகாரம்!

டெல் அவிட், ஏப். 11

இஸ்ரேலில் தாக்குதல்கள் அதிகரித்து வருவதைத் தடுக்கும் முயற்சியில், இஸ்ரேலியப் பிரதமர் நப்தலி பென்னட், அனைத்து பாதுகாப்புப் படைகளுக்கும் முழு சுதந்திரம் வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பலஸ்தீனியர் ஒருவர் நெரிசலான டெல் அவிவ் பொழுதுபோக்கு பகுதியில் மூன்று பேரைக் கொன்றது மற்றும் 16பேர் காயத்திற்கு வழிவகுத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரேலியப் பிரதமர் நப்தலி பென்னட் கூறுகையில், 'இந்தப் போருக்கு வரம்புகள் இல்லை மற்றும் இருக்காது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக நாங்கள் இராணுவம், ஷின் பெட் (உள்நாட்டு பாதுகாப்பு நிறுவனம்) மற்றும் அனைத்து பாதுகாப்புப் படைகளுக்கும் முழு சுதந்திரத்தை வழங்குகிறோம்' என கூறினார்.

இரவு முழுவதும் தீவிர தேடுதல் நடவடிக்கையின் பின்னர், நெரிசலான மதுபானச்சாலைகள் மற்றும் உணவகங்களின் வீதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்திய பாலஸ்தீனிய துப்பாக்கிதாரியை தாங்கள் சுட்டுக் கொன்றதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 35 வயதான பாரக் லுபான், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக டெல் அவிவ் மருத்துவமனை கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது.

# ஹஜ் யாத்திரைக்கு இந்த ஆண்டு சுமார் 10 லட்சம் பேருக்கு அனுமதி

ரியாத், ஏப். 11

ஹஜ் யாத்திரையில் பங்கேற்க இவ்வாண்டு சுமார் 10 இலட்சம் பேருக்கு அனுமதி வழங்க சவூதி அரேபியா தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோவிட் தொற்று நோய் காரணமாக கடந்த ஆண்டு வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இவ்வாண்டு வெளிநாட்டு யாத்திரிகர்களும் அனுமதிக் கப்படவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மக்காவிற்கு யாத்திரை மேற்கொள்பவர்கள் 65 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், முழுமையாக கொவிட தடுப்பூசி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு விடுத்துள்ள அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டில் இருந்து வரும் யாத்திரிகர்கள் சமீபத்தில் எடுக்கப்பட்ட கொவிட் எதிர்மறை பி.சி.ஆர். சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



தொற்று நோய்க்கு முந்தைய காலத்தில் சுமார் 25 இலட்சம் பேர் ஹஜ் யாத்திரையில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

தொற்று நோய் நெருக்கடியை அடுத்து கடந்த ஆண்டு ஐக்கிய இராச்சியத்துக்குள் வசிக்கும் சுமார் 60,000 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரைக்காக மக்கா மற்றும் மதீனாவில் உள்ள இஸ்லாமிய புனித தலங்களுக்கு வருபவர்கள் மூலம் ஆண்டுக்கு சராசரியாக 12 பில்லியன் டொலரை சவுதி-அரேபிய அரசு வருவாயாகப் பெறுவதாக உத்தியோகபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)



# விராட், அனுஜ் ராவத் அதிரடி!

## நான்காவது தோல்வியை சந்தித்த மும்பை!!

புனே,ஏப்.11

மும்பை இந்தியன்ஸ் அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, இந்த தொடரில் மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்தது பெங்களூரு அணி.

ஐபிஎல் 15வது சீசனின் 18ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினமிரவு மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கும் இடையில் ஆட்டம் நடைபெற்றது. புனே மைதானத்தில் நடந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களமிறங்கியது. முன்கள வீரர்களும், பின்கள வீரரர்களும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறினார். அந்த அணியின் சூர்ய குமார் யாதவ் மட்டுமே பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 68 ரன்கள் சேர்த்தார். அவரின் உதவியால் மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓ ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 151 ரன்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி களமிறங்கிய பெங்களூர் அணிக்கு சீனியர் - ஜூனியர் காம்போவில் அனுஜ் ராவத் மற்றும் டு பிளசிஸ் இருவரும் ஓப்பனிங் செய்தனர். டு பிளசிஸ் வழக்கம் போல அமைதியான ஆரம்பம் கொடுத்தாலும், மறுபுறம் இருந்த அனுஜ் ராவத் மும்பை பவுலர்களை சோதித்தார். இந்த இணை பவர் பிளேயை தாண்டி 8 ஓவர்கள் நீடித்தது. மெதுவாக ஆடிவந்த டு பிளசிஸ் 16 ரன்கள் எடுத்திருந்த போது உனட்கட் பந்து வீச்சில் கேட்ச் கொடுத்து முதல் விக்கெட்டாக வெளியேறினார்.

இதன்பின் தான் பெங்களூர் அணியின் ஆட்டம் சூடுபிடித்தது. அனுஜ் ராவத் உடன் விராட் கோலி இணைந்தார். நீண்ட நாள்களுக்கு பிறகு பார்முக்கு திரும்பிய விராட், அனுஜ் உடன் சேர்ந்து மும்பை பவுலிங்கை சிதறடித்தார். இதனால் வெற்றி இலக்கை வேகமாக நெருங்கவும் செய்தனர். 19 பந்துகளில் 22 ரன்கள் தேவை என்ற நிலை ஏற்பட்ட போது அனுஜ் ராவத் எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆனார். அனுஜ் ராவத் 66 ரன்கள் எடுத்தார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த விராட் கோலியும் இறுதிக்கட்டத்தில் பேபி ஏபி ஓவரில் எல்பி ஆகி சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். 48 ரன்களில் கோலி வெளியேறினாலும், இதன் பின் வந்த மேக்ஸ்வெல் முதல் இரண்டு பந்துகளையும் பவுண்டரிக்கு அனுப்பி அணியை வெற்றிபெற வைத்தார். இறுதியில் 18.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது பெங்களூரு.

மும்பை அணி தரப்பில் உனட்கட் மற்றும் பேபி ஏபி தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். தொடர்ச்சியாக இது மும்பைக்கு நான்காவது தோல்வி ஆகும். அதேநேரம் பெங்களூரு அணி தனது மூன்றாவது வெற்றியை பதிவு செய்து புள்ளி பட்டியலில் முதல் நான்கு இடங்களுக்குள் வந்தது.

### சென்னை அணிக்கு 4ஆவது தோல்வி:

# அபிஷேக் ஷர்மா அதிரடியில் ஹைதராபாத் வெற்றி

மும்பை, ஏப்.11

சென்னை சூப்பர் கிங்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சென்னை அணிக்கு இது 4ஆவது தொடர் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

மும்பையில் டி.ஒய்.பாட்டீல் கிரிக்கெட் மைதானத்தில் சென்னை மற்றும் ஹைதராபாத் அணிகள் நடப்பு சீசனின் 17ஆவது லீக் ஆட்டத்தில் மோதின. இதில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணியின் கப்டன் கேன் வில்லியம்சன், முதலில் தங்கள் அணி பந்து வீசும் என தெரிவித்தார். அதனால், சென்னை அணி பேட்டிங்கை தொடங்கியது. ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ராபின் உத்தப்பா இன்னிங்ஸை ஓப்பன் செய்தனர். இருவரும் சிறப்பான தொடக்கத்தை கொடுப்பார்கள் என எதிர்பார்த்த நிலையில் உத்தப்பா 15 ரன்களிலும், ருதுராஜ் 16 ரன்களிலும் அவுட்டாகி பெவிலியன் திரும்பினர். மூன்றாவது விக்கெட்டுக்கு 62 ரன்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைத்தனர் மொயின் அலி மற்றும் ராயுடு. 27 ரன்கள் எடுத்து அவுட்டானார் ராயுடு. தொடர்ந்து 35 பந்துகளில் 48 ரன்கள் எடுத்து அவுட்டானார் மொயின் அலி. பின்னர் ஆடிய ஜடேஜா 23 ரன்கள் எடுத்து அவுட்டானார். தோனி மற்றும் துபே 3 ரன்கள் மட்டுமே எடுத்து அவுட்டாகி வெளியேறினர். 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 154 ரன்கள் எடுத்தது சென்னை.



ஹைதராபாத் அணிக்காக நடராஜன் மற்றும் வாஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தனர். வாஷிங்டன் சுந்தர் 4 ஓவர்கள் வீசி வெறும் 21 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்திருந்தார்.

இதையடுத்து 154 ரன்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு கேன் வில்லியம்ஸ், அபிஷேக் ஷர்மா இணை துவக்கம் கொடுத்தது. சிறப்பான ஆட்டத்தை தொடங்கிய இந்த இணை 10 ஓவரில் 69 ரன்களை சேர்த்தது. இந்த இணையை 13-வது ஓவர் வீசிய முகேஷ் சௌத்ரி பிரித்தார். அவர் வீசிய பந்தில் பிடி கொடுத்து கேன் வில்லியம்சன் அவுட் அனார். 33 பந்துகளை எதிர்கொண்டவர் 56 ரன்களை சேர்த்திருந்தார்.

இதையடுத்து களத்துக்கு வந்த ராகுல் திரிபாதி, அபிஷேக் ஷர்மா இணை அணியின் ஸ்கோரை உயர்த்தியது. தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த அபிஷேக் ஷர்மாவை பிராவோ வெளியேற்றினார். 50 பந்துகளில் 75 ரன்களை குவித்துவிட்டு அவர் பெவிலியன் திரும்பினார்.

இதையடுத்து, 17.4 ஆவது ஓவரிலேயே இலக்கை எட்டி வெற்றியைப் பதிவு செய்தது ஹைதராபாத். ராகுல் திரிபாதி 39 ரன்களுடனும், பூரன் 5 ரன்களுடனும் நாட் அவுட் பேட்ஸ்மேன்களாக களத்தில் இருந்தனர். சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணி தரப்பில் மொயின் அலி 2 விக்கெட்டுகளையும், ஜடேஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

4-வது தோல்வியைச் சந்தித்துள்ள சென்னை அணி, புள்ளிப் பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளது.

# வங்காளதேசத்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்: தென் ஆப்பிரிக்கா 453 ரன்களுக்கு ஆல் அவுட்

போர்ட் எலிசபெத், ஏப். 11

வங்காளதேச அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையே 2ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா கப்டன் டீன் எல்கர் முதலில் பேட்டிங் தேர்வு செய்தார்.



அதன்படி, தென் ஆப்பிரிக்கா அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க ஆட்டக் காரர்களாக கப்டன் டீன் எல்கர், எர்வி களமிறங்கினர். எர்வி 24 ரன்கள் எடுத்து அவுட் டானார். அடுத்து இறங்கிய பீட்டர்சன் டீன் எல்கருடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் பொறுப்புடன் ஆடி அரைசதம் அடித்து அசத்தினர். எல்கர் 70 ரன்களில் ஆட்டமிழந்தார். அதன்பின், களமிறங்கிய பவுமா சிறப்பாக விளையாடினார். பீட்டர்சன் 64 ரன்களிலும் பவுமா 67 ரன்களிலும் வெளியேறினர்.

முதல் நாள் முடிவில் தென் ஆப்பிரிக்கா அணி 5 விக்கெட் இழப்பிற்கு 278 ரன்கள் எடுத்திருந்தது. இந்நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. கேசவ் மகாராஜா பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தார். அவர் 84 ரன்னில் அவுட்டானார். இறுதியில், தென் ஆப்பிரிக்கா அணி முதல் இன்னிங்சில் 453 ரன்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. வங்காளதேசம் சார்பில் தைஜுல் இஸ்லாம் 6 விக்கெட்டும், காலித் அகமது 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, வங்காளதேசம் அணி முதல் இன்னிங்சை தொடர்ந்தது. தொடக்க ஆட்டக் காரர் தமிம் இக்பால் பொறுப்புடன் ஆடினார். அரை சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 47 ரன்னில் ஆட்ட மிழந்தார். நஜ்முல் ஹசைன் ஷாண்டோ 33 ரன் எடுத்தார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் வங்காள தேசம் அணி 5 விக்கெட் இழப்புக்கு 139 ரன்கள் எடுத்துள்ளது. முஷ்பி குர் ரஹிம் 39 ரன்னுடன் ஆட் டமிழக்காமல் உள்ளார். இன்று மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

# இலங்கை அணியின் பயிற்சியாளராக கிறிஸ் சில்வர்வுட் நியமனம்!

கொழும்பு, ஏப். 11

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைமைப் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக பொறுப்பேற்க உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவர் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

“தேசிய அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக கிறிஸை நியமிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர் மிகவும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர். இலங்கை அணியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கும் தகுதிகள் அவரிடம் உள்ளது.” என்று இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ஆஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

இதுகுறித்து சில்வர்வுட் கூறுகையில், “இலங்கையுடன் இணைவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், இலங்கை கிரிக்கெட் அணியில் திறமையான மற்றும் ஆர்வமுள்ள வீரர்கள் உள்ளனர். வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை சந்திப்பதில் மிகவும் ஆவலுடன் இருக்கிறேன்“ என்று அவர் கூறினார்



சில்வர்வுட், அக்டோபர் 2019 இல் இங்கிலாந்து ஆண்கள் அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட்டார். 2019 இல் இங்கிலாந்து ஒரு நாள் உலகக் கோப்பையை வென்றபோது அப்போதைய தலைமை பயிற்சியாளர் ட்ரெவர் பெய்லிஸின் கீழ் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

# மணியந்தோட்டத்தில் பெண் அடித்தே கொல்லப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஏப். 11

அரியாலை மணியந்தோட்டத்தில் குடும்பப்பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவத்தை செய்த இளைஞன் ஹெரோய்ன் போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

காசுக் கொடுக்கல் வாங்கல் பிரச்னையில் குடும்பப் பெண்ணை அடித்துக் கொலை செய்து புதைப்பதற்கு இளைஞனின் தாயின் சகோதரி தூண்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 2ஆம் திகதி காணாமற்போன குடும்பப் பெண் ஒருவரின் சடலம் கடந்த வாரம் மணியந்தோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றின் வளாகத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மணியந் தோட்டத்தைச் சேர்ந்த பி. யசிந்தா (வயது-44) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சடலம் மீட்கப்பட்ட வீட்டில் வசித்த கணவன், மனைவி மற்றும் அவர்களது உறவுமுறையான 20 வயதுடைய இளைஞன் ஆகிய மூவர் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் மற்றும் நிபுணத்துவ விசாரணைகளில் இந்தக் கொலை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் வருமாறு:

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட குடும்பத்துக்கு கடற்தொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மாதம் 25 சதவீத மீற்றர் வட்டிக்கு 3 லட்சம் ரூபாய் மீளச் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கொல்லப்பட்ட பெண் வழங்கியுள்ளார்.

அந்தப் பணம் மீள வசூலிப்பதற்காக குடும்பப் பெண் பல தடவைகள் அவர்களது வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும் பணத்தை உரிய தவணையில் செலுத்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த நிலையில் வட்டிக்கு பணம் வழங்கிய பெண்ணை கொலை செய்ய பணம் வாங்கிய பெண், தனது சகோதரியின் மகனுடன் திட்டமிட்டுள்ளார். அதற்காக இளைஞனுக்கு ஹெரோய்ன் வாங்குவதற்கு பணம் வழங்கியுள்ளார்.

கடந்த மார்ச் 2ஆம் திகதி அந்த வீட்டுக்கு பணத்தை வசூலிக்க பெண் சென்றுள்ளார். அங்கு குடும்பத்தலைவர் கடற்தொழிலுக்குச் சென்ற நிலையில் அவரது மனைவியும் மனைவியின் சகோதரியின் மகனும் இருந்துள்ளனர்.

பணம் கேட்டுச் சென்ற குடும்பப்பெண்ணின் தலையில் இளைஞன் இரண்டு தடவைகள் மொட்டையான ஆயுதத்தினால் தாக்கியுள்ளார். அதனால் அந்தப் பெண் சரிந்து நிலத்தில் விழுந்துள்ளார். அதன் பின்னர் சிறிய தாயாரும் இளைஞனும் சேர்ந்து தலையணையை முகத்தில் அமுக்கி பெண்ணை கொலை செய்துள்ளனர்.

கடற்தொழிலுக்குச் சென்று வீடு திரும்பிய குடும்பத்தலைவர் வீட்டுக்குள் கொல்லப்பட்ட பெண்ணின் சடலத்தைக் கண்டு முரண்பட்டுள்ளார். அதனையடுத்து வீட்டு வளாகத்துக்குள் குழி தோண்டி பெண்ணின் சடலத்தைப் புதைத்துள்ளனர்.

எனினும் கொல்லப்பட்ட பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் வீட்டு வளாகத்துக்குள் நின்றுள்ளது. மறுநாள் அதனைப் புதைப்பதற்கு தொழிலாளி ஒருவரை அழைத்து குப்பை கொட்டுவதற்கு என குழி தோண்டியுள்ளனர். அதற்குள் மோட்டார் சைக்கிளைப் புதைத்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இளைஞனுக்கு ஹெரோய்ன் வாங்கப் பணம் கொடுக்க அவரது சிறிய தாயார் சில நாள்களாக மறுத்து வந்துள்ளார். அதனால் மற்றொரு வட்டிக்கொடுக்கும் நபரிடம் சென்ற இளைஞன், "வட்டி அக்காவை கொலை செய்து புதைத்துள்ளேன், பணம் தராவிடின் யாரையும் அப்பிடிதான் செய்வேன்" என்று கூறியுள்ளார்.

இளைஞன் போதையில் உளறுவதாக அந்த நபர் விட்டுள்ளார். எனினும் காணாமற்போன பெண் தொடர்பில் பேசப்பட்டதனால் இளைஞன் தன்னிடம் கூறியதை அந்த நபர் பொலிஸாருக்கு தெரிவித் துள்ளார்.

அதனையடுத்தே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். கணவன், மனைவி மற்றும் உறவுமுறை இளைஞனை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் அவர்களது வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் மற்றும் மோட்டார் சைக்கிளை பொலிஸார் மீட்டனர். (அ)




## "வீட்டுக்குப் போ கோட்டா"

### காலிமுகத்திடலில் பறக்கும் பட்டம்

கொழும்பு, ஏப். 11

ஜனாதிபதிக்கு எதிராக காலிமுகத்திடலில் தொடர்ந்து வரும் போராட்டத்துக்கு மத்தியில், வீட்டுக்குப் போ கோட்டா என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பட்டம் பறக்கவிடப்பட்டது. (அ)

## 5,000 ரூபா தருவதாக சொன்னார்கள் அதனால் கோட்டாபயவுக்கு ஆதரவு!

கொழும்பு, ஏப். 11

ஜனாதிபதிக்கு ஆதரவான பேரணியில் கலந்து கொள்வதற்கு ரூபா 5,000 தந்தார்கள். அதனால் 'கோட்டா எமக்கு வேண்டும்' என கோசமிட்டு பேரணியில் கலந்துகொண்டேன் என அசால்ட்டாக கூறியுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பேரணியில் ஈடுபட்ட ஒருவர்.

சில நாட்களின் முன்னர் கொழும்பில் சிறிய குழுவொன்று ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஆதரவாக பேரணியில் ஈடுபட்டது.

அந்த பேரணியில் கலந்து கொண்ட ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்கு இந்தத் தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

நாம் குப்பை சேகரிப்பவர்கள். கோட்டாபய ஆதரவு பேரணிக்கு அழைத்தார்கள். 5,000 ரூபா பணம், உணவு தருவதாகச் சொன்னார்கள். எங்களுக்கு முஸ்லிம்களைப்போல தொப்பி அணிவித்தார்கள் என அவர் கூறியுள்ளார். (அ)

## டீசல் விலை மேலும் கடுமையாக உயரும்!

கொழும்பு, ஏப். 11

இலங்கையில் தற்போது ஒரு லீற்றர் டீசல் விற்பனையின் போது 120 முதல் 125 ரூபா வரை நட்டத்தை சந்தித்து வருவதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்தில் கொண்டு டீசல் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் அமெரிக்க டொலரின் பெறுமதி 203 ரூபாவில் இருந்து ரூபா 320 ஆக அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் ஏ.என்.ஐ. செய்தி முகாமையிடம் அவர் தெரிவித்தார்.

சர்வதேச விலை நிர்ணயம் சார்ந்தே நாங்கள் எரிபொருட்களின் விலைகளை நிர்ணயம் செய்கிறோம். சர்வதேச விலை நிர்ணயத்தின் அடிப்படையில் விலை அதிகரிப்பு செய்யவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நட்டத்தில் இயங்கினாலும் எங்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து எந்த மானியமும் கிடைக்கவில்லை. நாங்கள் தொடர்ந்து நட்டத்தை சந்தித்தால் எங்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. ஒரு லீற்றருக்கு 100 ரூபாய் நட்டம் ஏற்பட்டால், மாதம் 50,000,000 லீற்றர் எரிபொருளை விற்பனை செய்தால், மாதத்திற்கு சுமார் 5 பில்லியன் ரூபாய் நட்டத்தைச் சந்திக்க நேரிடும்.

எனினும் வாடிக்கையாளர்கள் மீது சுமையை ஏற்றாமல் இருக்கத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா கூறினார்.

ஜூன் 2019 இல் டீசல் விலை 104 ரூபாவாக இருந்தது. 2 ஆண்டுகளுக்கும் மேலாக விலைகள் அப்படியே இருந்தன. எங்கள் விலைகள் நீண்ட காலமாக தேசிய எண்ணெய் நிறுவனங்களுடன் ஒத்துப்போகின்றன. ஆனால் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகளின் செங்குத்தான உயர்வு மற்றும் இலங்கை நாணய பெறுமதியிழப்பைக் கருத்தில் கொண்டு விலைகளை சமீபத்தில் உயர்த்தவேண்டி ஏற்பட்டது. எங்களுக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது எனவும் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## இன்று மீண்டும் பழைய அமைச்சரவை!

கொழும்பு, ஏப். 11

பழைய அமைச்சரவையே இன்று புதிய அமைச்சரவையாக பதவியேற்கும் என்று அறியமுடிகின்றது.

பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களை காண்பித்து ஆட்சியை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்நிலையில், அந்த சவாலை ஏற்றுக்கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் தயங்குகின்றன.

ஆகையால், மீண்டும் இன்று திங்கட்கிழமை பழைய அமைச்சரவையே புதிய அமைச்சரவையாக பதவியேற்றுகும் என்று முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (அ)

## நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்வு

கொழும்பு, ஏப். 11

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக தொடர்ந்து முக்கிய நீர்த்தேக்கங்கள் பலவற்றில் நீர் மட்டம் 66 வீதமாக அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் டி. அபேசிரிவர்தன், இதுதொடர்பாக தெரிவிக்கையில் தற்போதைய நீர் எதிர்வரும் சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு போதுமானது என்றார். (அ)

## ஜனாதிபதிக்கு ஆதரவளித்து ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, ஏப். 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவாக நாட்டில் சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நேற்று நடைபெற்றன.

கண்டி, நிக்கவரெட்டிய, தங்காலை, படல்கும்புர போன்ற பிரதேசங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகளின் தலைவர்கள், உப தலைவர்கள் உட்பட அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் கலந்துக்கொண்டனர். (அ)


## வியுக்தியார் பதில்கள்



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார். அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகம்இருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள். வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்,
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## மன்னாரிலிருந்து...

இலங்கை தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் கடும் விலை ஏற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இலங்கை தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக செல்லக்கூடும் என்பதால் சர்வதேசக் கடல் எல்லைப் பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவேண்டும் என கடலோர பாதுகாப்பு குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டிருந்தது.

நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு ஒரு படகில் திருகோணமலையைச் சேர்ந்த 10 பேர் இரண்டு கைக் குழந்தைகளுடன் மன்னாரில் இருந்து புறப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 2 மணி அளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனை ஒன்றாம் மணல் திட்டில் இறங்கி உள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

இதே போல் மன்னாரில் இருந்து நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு யாழ்பாணம் மற்றும் மன்னாரை சேர்ந்த 9 பேர் ஒரு படகில் மன்னாரில் இருந்து புறப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தனுஷ்கோடி சென்று இறங்கி பின்னர் அரசு பஸ் மூலம் தாமாக மண்டபம் அகதிகள் முகாமுக்கு சென்றனர்.

இது குறித்து தகவலறிந்த மண்டபம் மெரைன் பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று விசாரித்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை விலை ஏற்றம் மற்றும் மண்ணெய், டீசல், பெற்றோல் உள்ளிட்ட பொருட்களின் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் தமிழகத்துக்கு அகதிகளாக வந்தாக பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## ஆட்சியாளர்...

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக மாறிவிடும் என நான் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தேன். டொலர்களை சிக்கனமாக பயன்படுத்துங்கள் எனவும் கூறிவந்தேன்.

அதனை கவனத்தில் கொள்ளாது கணக்கின்றி செலவு செய்து, நாடு அழிவின் விளிம்பிற்கு சென்றுள்ளது. இன்னும் சில வாரங்கள் அல்லது ஒரு மாதத்திற்குள் நாடு வங்குரோத்து அடைந்து விட்டது என்பதை விருப்பமின்றியேனும் அறிவிக்க நேரிடும்.

நாளை யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிலைமையை மாற்ற முடியாது. உலகில் அரசியல்வாதிகளை கொள்ளையிடுமாறு அழுத்தம் கொடுக்கும் அரசியலமைப்புச் சட்டம் இருக்கும் ஒரே நாடு இலங்கை என நான் நினைக்கின்றேன்.

அரசியலமைப்புச் சட்டத்திலேயே சிக்கல் இருக்கின்றது. வேறு தரப்பினர் ஆட்சிக்கு வந்தாலும் பிரச்சினை தீராது. தற்போது நாடாளுமன்றத்தில் இருப்போரை பயன்படுத்தி இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது அத்தியவசியமான விடயமாக இருந்தாலும் அவர்களை அனுப்பும் முன்னர் இவர்களை பயன்படுத்தி அரசியலமைப்பை திருத்த வேண்டிய கடமை எமக்கு இருக்கின்றது-என்றார். (அ)

## சிறுவன்...

இதேவேளை, ஹங்குராங்கெத்த, ஹேவாஹெட்ட - முல்லோயா தோட்ட மேல் பிரிவில் மின்னல் தாக்கி உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

55 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். (அ)

## நம்பிக்கையில்லா...

எனவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது அரசியல் இலாபம் கொண்டது. அதனை எதிர்கொள்வோம் - என்றார். (அ)

## கோட்டாபய...

தலைமையால் மக்கள் நீண்ட வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏ.என்.ஐ. இந்திய ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019 இல்- தமது காலத்தில், நாட்டின் பொருளாதாரம் ஒரு மூலதன உபரியுடன் ஆரோக்கியமான நிலையில் இருந்தது, ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் திறமையின்மை மக்களை வீதிக்கு கொண்டு வந்துள்ளது.

மோசமான பொருளாதார நிலைமை அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது. நடப்பது நாட்டிற்கு பேரழிவு. இரண்டு ஆண்டுகளாக, இந்த அரசாங்கம் பொருளாதாரப் பிரச்னைகளின் அனைத்து அறிகுறிகளையும் புறக்கணித்தது. தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதில்லை யென்ற நிலைப்பாட்டில் இருந்து, உரிய நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தை அணுகவில்லை.

தற்போது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை அணுகினாலும் எந்தவொரு அர்த்தமுள்ள நிவாரணம் வருவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

இந்தியாவினால் நீடிக்கப்படும் எரிபொருளுக்கான கடன் வரியானது மே மாதம் இரண்டாவது வாரம் வரை மட்டுமே நீடிக்கும். அதன் பின்னர் இலங்கை கடும் சிக்கலில் சிக்க நேரிடும்- என்றார். (அ)

## ராஜபக்ஷ...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்லவேண்டும் என்றும், பெரமுன அரசு பதவி விலகவேண்டும் என்றும் கடந்த மூன்று தினங்களாக கொழும்பில் காலி முகத்திடலிலும் ஜனாதிபதி செயல கம் முன்பாகவும் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முழு வீச்சில் இடம் பெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களின்போதே ஜனாதிபதி கோட்டாபய மீதும், ராஜபக்ஷ குடும்பம் மீதும் போர்க்குற்ற விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கைகளும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி செயலகத்தின் முன் இடம்பெற்ற போராட்டங்களின்போது இறுதிப்போரில் நடந்த போர்க்குற்றங்களுக்கு நீதி கோரும் வாசகங்கள் அடங்கிய பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ராஜபக்ஷ குடும்பத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து, கோட்டா 2009 இல் வடக்கில் பிடித்துச் சென்றவர்கள் எங்கே? , மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வேண்டும் போன்ற வாசகங்களுடன் பலரும் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டாபய அரசுக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு வலுத்து வரும் நிலையில் தற்போது ஜனாதிபதி மீதும், ராஜபக்ஷ குடும்பம் மீதும் போர்க்குற்ற விசாரணை கோரும் குரல்களும் வலுவடைந்து வருகின்றமை இந்த அரசுக்கு புதிய தலையிடியை ஏற்படுத்தியுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறின. (அ)

# ஜனாதிபதியுடனான பேச்சில் முக்கியமாக எதுவுமே இல்லை

## வாசுதேவ கூறுகிறார்

ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் முக்கியமான விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். கடந்த வாரம் அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற் படுவதற்கு தீர்மானித்த 41 பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை, புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவை நிர்ப்பந்திப்பதே இந்த சந்திப்பின் முக்கிய நோக்கமாகும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டீசலுக்காக காத்திருந்த லொறியின் சில்லினுள் சிக்கி முதியவர் மரணம்!

## அச்சுவேலிப் பகுதியில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 11

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அச்சுவேலிப் பகுதியில் லொறியின் சில்லில் சிக்கி முதியவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று டீசல் வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்திருந்து நகர்ந்து சென்றுள்ளன.

அவ்வாறு நகர்ந்து சென்ற லொறி ஒன்றின் முன்பாக வீதியை நோக்கிச் சென்ற முதியவர் ஒருவர் அதன் சில்லில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பத்தமேனி, அச்சுவேலி என்ற முகவரியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகரத்தினம் (வயது-77) என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அச்சுவேலிப் பொலிஸார் லொறியின் சாரதியைக் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-03)

# அரசாங்கத்தின் செயற்பாடு வெட்கக்கேடான செயலாகும்

## சாடுகின்றார் பொன்சேகா

கொழும்பு, ஏப். 11

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி இரவு பகல் பாராது மக்கள் போராடி வருகின்றனர். ஆனால், ஜனாதிபதியும், அரசும் பதவி விலகாமல் அதிகாரத் திமிருடன் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது அவர்களுக்கு வெட்கக்கேடான செயலாகும்.” - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாகப் போராட்டம் இடம்பெற்றது. இது தொடர்பில் பொன்சேகா எம்.பி. கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தனக்கு 69 இலட்சம் மக்களின் ஆணை கிடைத்தது என்ற இறுமாப்புடன் ஜனாதிபதி கோட்டாபய பதவியில் அமர்ந்திருக்கின்றார். அதேவேளை, தமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உண்டு என்ற திமிருடன் அரசு செயற்படுகின்றது. ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக் கூட இந்த அரசு இழந்து விட்டது. அதேவேளை, ஜனாதிபதிக்கு ஆணை வழங்கிய மக்களும் இன்று அவருக்கு எதிராகக் களமிறங்கிப் போராடி வருகின்றனர்.

பதவி ஆசையில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள், மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள். மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் அவர்களுக்குத் தூசு போல் தென்படலாம்.

ஆனால், நாளாந்தம் வலுப்பெறும் மக்கள் போராட்டங்கள், ஜனாதிபதியையும் அரசையும் விரைவில் வீட்டுக்கு விரட்டியடிக்கும்” - என்றார். (அ)

## காலிமுகத்திடலில்...

பதி செயலகத்துக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கைகளை கொட்டும் மழைக்கு மத்தியிலும் முன்னெடுத்திருந்தனர்.

விடியவிடிய முன்னெடுக்கப்பட்ட போராட்டம் விடிந்தும் தொடர்ந்தது. அவர்களுடன் மேலும் சிலர், காலையிலும், பிற்பகலிலும் இணைந்துகொண்டனர். இதனால், காலிமுகத்திடலின் போராட்டம் நேற்று இரவும் தொடர்ந்தது.

போராட்டத்துக்கு வருவோருக்கு நேற்று முன்தினம் தண்ணீர் போத்தல்கள் தன்னார்வ தொண்டர்களினால் வழங்கப்பட்டன.

நேற்று சுடச்சுட தேநீர் மற்றும் மரவள்ளி கிழங்கு அவியல், தன்னார்வ தொண்டர்களினால் வழங்கப்பட்டமை சிறப்பு அம்சமாகும்.

சீரற்ற வானிலையையும் கடும் மழையையும் பொருட்படுத்தாது, போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. (அ)

## மைத்திரி...

வதிவிடத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் 11 கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. (அ)

## கொட்டும்...

களில் பெருமளவானவர்கள் வீடுகளுக்குச் செல்லாமல் அங்கேயே தரித்திருந்து போராடி வருவதாகத் கொழும்பும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போராட்டத்தில் பங்கேற்றிருப்பவர்களுக்கு பலர் உணவு, தேநீர் என்பவற்றை வழங்கி ஆதரவு தெரிவித்துவருவதாகவும் தெரியவந்துள்ளது.

நேற்றும் ஜனாதிபதி செயலகம் முற்றுகையிடப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன. (அ)

ஈழநாடு
Eelanadu

# நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றி கொள்ள சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைதல் அவசியம்!

## கரு பரணவிதான கோரிக்கை

கொழும்பு, ஏப். 11

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிகொள்வதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கரு பரணவிதான தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெறும் எதிர்க்கட்சிகளின் வேலைத்திட்டமாக மாறக்கூடாது.

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க ராஜபக்ச உறுப்பினர் எவரையும் உள்ளடக்காத இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

யாராவது இடைக்கால அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயங்கினால், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அதனை ஏற்றுவழிநடத்த தயாராக உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும், ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் கையொப்பமிடத் தொடங்கியுள்ளார்.

ஆகவே அதனை வெற்றியடையச் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்- என்றார். (அ)



## கூரையை பிளந்தது இடி மின்னல்

முல்லைத்தீவு, ஏப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வித்தியாபுரம் பகுதியில் நேற்று மாலை மின்னல் தாக்கியதில் வீடொன்று சேதமடைந்துள்ளது.

அத்துடன், வீட்டு மின்னிணைப்பு பாதிக்கப்பட்டதுடன், வீட்டில் பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் பொருட்கள் பலவும் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழையுடனான கால நிலை நிலவிவருகின்ற நிலையில் இந்த மின்னல் தாக்கம் நிகழ்ந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள் இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்க ஏற்பாடு செய்து வருவதாக தெரிவித்துள்ளனர். (அ)

## போராட்டங்களுக்கு மத்தியில் மக்கள் நாட்டு பிரச்சினைகளை மறந்துவிட்டனர்

கொழும்பு, ஏப். 11

அரசியல் போராட்டங்களுக்கு மத்தியில் மக்கள் நாட்டின் பிரச்சினைகளை மறந்து வருகின்றனர் என மக்கள் உரிமைப் பாதுகாப்பு அறக்கட்டளை அமைப்பு தெரிவித்துள்ளது.

வரவிருக்கும் பண்டிகைக் காலத்திற்கு பின்னரும் பொருட்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் என அந்த அமைப்பின் தலைவர் அசேல சம்பத் கூறியுள்ளார்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்கக்கோரி மக்கள் முன்னெடுத்த போராட்டம் விலைவாசி அதிகரிப்புடன் எரிவாயு, எரிபொருள் மற்றும் மருந்து தட்டுப்பாடு போன்ற உண்மையான பிரச்சினைகளை துடைத்தெறிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சதொச விற்பனை நிலையங்களில் ஏற்கனவே பொருட்கள் தீர்ந்துவிட்டது என்றும் அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார நிர்வாகத்தினால், பணவீக்கம் அதிகரித்து மக்கள் மேலும் சுமைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ)

## மதுபான நிலையங்கள் இரண்டு நாள்கள் பூட்டு

கொழும்பு, ஏப். 11

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு, எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் அனைத்து மதுபானச்சாலைகளையும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த இரண்டு தினங்களிலும் நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு மதுவரித் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது. (அ)

## கோபுரத்தில் இருந்து "கோட்டா கோ ஹோம்"



திருமலை, ஏப். 11

திருகோணமலை - சேரு நுவர நகர் பகுதியிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தில் ஏறிய தனிநபர் ஒருவர், "கோட்டா கோ ஹோம்" என்ற வாசகத்தை ஏந்தி எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இதற்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் சேருநுவர பகுதியைச் சேர்ந்த இளை ஞர்கள் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் சுலோகங் களை ஏந்தி , கோஷங்களை எழுப்பி, அரசாங்கத்தின் மீதுள்ள எதிர்ப்பை வெளிப் படுத்தியிருந்தனர். இதன்போது ரயர்களை எரித் தும் எதிர்ப்பை வெளியிட் டனர்.

மணிக்கூட்டுக் கோபுரத் தில் ஏறியிருந்த நபர் கோட்டாபாய, பஸில் ராஜபக்ஷர் களுக்கு எதிராக தமது கோசத்தை எழுப்பினார்.

மாலை 4.20 மணிக்கு ஆரம்பித்த எதிர்ப்பு போராட்டத்தை அவர் மாலை 6.30 மணிக்கு நிறைவு செய்து கொண்டு கோபுரத்தில் இருந்து இறங்கினார்.

## ஆலையடிவேம்பு பிரதேசத்தில் 54 பவுண் தங்க நகை திருட்டு!

அம்பாறை, ஏப். 11

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று அதிகாலை 1 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் 54 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆசிரியரும் அவரது மனைவியும் அவர்களது ஒரு வயதுப் பெண் குழந்தையும் வீட்டின் ஒரு அறையில் தூங்கிக்கொண்டிருக்கும்போது வீட்டின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் மூவரும் தூங்கிக் கொண்டிருந்த அறையை பூட்டிவிட்டு மற்றைய அறையை திறந்து அங்கிருந்த அலுமாரியை உடைத்து அதில் இருந்த மூவரின் மூன்று தாலிக்கொடி அடங்கலாக 54 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.


தமது ஒரு வயது குழந்தைக்கு நேற்று பிறந்த நாள் கொண்டாடும் எண்ணத்துடன் பிறந்த நாளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டு தூங்கியர்கள் காலை 5 மணிக்கு எழும்பிக் கதவை திறக்க முற்பட்டுள்ளனர். ஆயினும் கதவு திறக்காதபடி பூட்டப்பட்டிருந்ததையறிந்து சத்தம் போட்டு அயலவர்களை அழைத்து வெளியே வந்து பார்த்தபோது வீடு திறந்து கிடப்பதையும் அலுமாரியில் இருந்த நகைகள் காணாமல் போனதையும் அறிந்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு தகவலை வழங்கியதையடுத்து அக்கரைப்பற்று பொலிஸார்,அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவினர், அம்பாறை தடயவியல் விசாரணை பிரிவினர் என பல தரப்பினரும் சம்பவ இடத்துக்கு வகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மெற்கொண்டு வருவதாகவும் ஸ்ரீ தெரிவிக்கப்பட்டது. (அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 03 . 1941



இறப்பு 09 . 04 . 2022

### பிலிப்பு லூக்காஸ்

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம், சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பு லூக்காஸ் அவர்கள் 09.04.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரி பிலிப்பு – பிலிப்பு மரியம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் பற்றிக் றெஜினா அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற றெஜினம்மா அவர்களின் அன்புக் கணவரும் அன்ரன் லியோ, வெனன்சியா மகி, மரீனஸ் இயூஜின், அருட்பணி றெஜினியூட் அவலின் (முஆஜ), கில்லறியன் பிளேசியஸ், யோசவ்வாசன் (தாதி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்- லெனாட் டணஸ்ரன், கிளாறிஸ் நிதாஞ்சனி (தாதிய உத்தியோகத்தர்), கோமி கனிஸ்ரா, சுரேகா, சாந்தினி (தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 11.04.2022 திங்கட் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்று பின்னர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.ஜேம்ஸ் வீதி,
இளவாலை.

தகவல்:
பிள்ளைகள்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - அயன், நடுவுல கொஞ்சம் பக்கத்தை காணோம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா - வைத்தியர் இ.மணிவாசகன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு